
திருப்பாவையில்
தேடிய முத்து
ஷக்திப்ரபா

**நூல் :** திருப்பாவையில் தேடிய முத்து

**ஆசிரியர் :** ஷக்திப்ரபா (prabha2talk2@yahoo.com)

**அட்டைப்படம் :** ஷக்திப்ரபா (prabha2talk2@yahoo.com)

**மின்னூலாக்கம் :** ராதிகா சுந்தரராஜன் (radhikaukt@gmail.com)

**மின்னூல் வெளியீடு** : freetamilebooks.com

**உரிமம் :** Creative Commons Attribution -NonCommercial-ShareAlike ( யாரும் பகிரலாம், விற்பனை கூடாது)

# திருப்பாவையில் தேடிய முத்து

## முன்னுரை

திருப்பாவை பாசுரங்கள்  ஞானக்கடல். அவற்றுள் ஒளிந்திருக்கும் முத்துகள் ஏராளம். ஒவ்வொரு பாசுரமும்  ஆன்ம  ஞானத்துக்கு படிக்கட்டு. அறிவிற்கு சட்டென்று எட்டிவிடுவதில்லை.

பாசுரங்களின் சொல்ல முற்படும் ஆழ்ந்த கருத்துக்களை என் சிந்தைக்கு எட்டியவரை எழுத வேண்டும் என்ற எண்ணத்தின் பேரில், அந்த கண்ணனுக்கே மாலையாக அற்பணிக்கும்  நோக்கத்தில் இந்த எளியவள் எழுதியது.

ஆண்டாளின் திருவடிகளைப் போற்றி,  கண்ணனுக்கே இதை சமர்பிக்கிறேன்.

**அன்புடன்,**

**ஷக்திப்ரபா**

# பொருளடக்கம்

1. திருப்பாவை பாசுரம் 1 -- பறைதரும் பரந்தாமன். ....................................................6

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்........................................................... 7

2. திருப்பாவை பாசுரம் 2 -- பாவை நோன்பு..................................................................8

வையத்து வாழ்வீர்காள் !நாமும்நம் பாவைக்கு........................................................... 9

3. திருப்பாவை பாசுரம் 3 -- மாசற்ற செல்வம் ..............................................................10

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி........................................................................ 11

4. திருப்பாவை பாசுரம் 4 -- கேட்கும் ஒலியிலெல்லாம், நிந்தன் கீதமே ...............12

ஆழிமழைக் கண்ணா !ஒன்று நீ கைகரவேல்............................................................ 12

5. திருப்பாவை பாசுரம் 5 -- பாடுவோமே பாசுரம் பாடுவோமே ................................13

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை ................................................................. 13

6. திருப்பாவை பாசுரம் 6 -- விழித்தெழு ..பிள்ளாய் விழித்தெழு............................14

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்................................................ 14

7. திருப்பாவை பாசுரம் 7 -- நாயகப் பெண்பிள்ளாய், பேயுறக்கம் தகுமோ! .........15

கீசு கீசென்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து ...................................................... 15

8. திருப்பாவை பாசுரம் 8 -- கிழக்கும் வெளுத்தது!....................................................16

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு.............................................................. 16

9. திருப்பாவை பாசுரம் 9 -- ஏமப் பெருந்துயிலில் மந்திரப்பட்டோமே ....................17

தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய ..................................................................... 17

10. திருப்பாவை பாசுரம் 10 -- சொல்லும் செயலும்.......................................................18

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் ............................................................. 18

11. திருப்பாவை பாசுரம் 11-- பக்தர்களின் உறக்கம்......................................................19

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து.................................................................... 19

12. திருப்பாவை பாசுரம் 12 -- ஸ்ரீ ராமகீர்த்தனம் பாடுவோம்.....................................20

கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கு இரங்கி ........................................................ 20

13. திருப்பாவை பாசுரம் 13 -- அசுரர்களை வீழ்த்தும் பரந்தாமன் ............................21

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக் ........................................................ 22

14. திருப்பாவை பாசுரம் 14 -- தடக்கையனை வணங்குவோம் ....................................23

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள் ........................................................ 23

15. திருப்பாவை பாசுரம் 15 -- பக்தர்களுடன் இணைவோம் ......................................24

எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ ........................................................ 25

16. திருப்பாவை பாசுரம் 16 -- நுழைவாயில் ........................................................26

நாயகனாய் நின்ற நந்தகோப னுடைய ........................................................ 27

17. திருப்பாவை பாசுரம் 17 -- கண்ணா, கண் பாராய்! ................................................28

அம்பரமே, தண்ணீரே, சோறே, அறஞ்செய்யும் ........................................................ 29

18. திருப்பாவை பாசுரம் 18 -- நப்பின்னையின் நாயகன் ...........................................30

உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன் ........................................................ 31

19. திருப்பாவை பாசுரம் 19 -- திவ்ய தம்பதியர் ......................................................32

குத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டில் மேல் ........................................................ 33

20. திருப்பாவை பாசுரம் 20 -- பக்தவத்ஸலனே துயிலெழுவாய் ..............................34

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று ........................................................ 34

21. திருப்பாவை பாசுரம் 21 -- பக்தரிடம் சிக்கிய பகவான் ...........................................35

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப ........................................................ 36

22. திருப்பாவை பாசுரம் 22 -- கண்ணாமூச்சி விளையாட்டு ......................................37

அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான ........................................................ 37

23. திருப்பாவை பாசுரம் 23 -- ராஜாதிராஜா ........................................................38

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் ........................................................ 39

24. திருப்பாவை பாசுரம் 24 -- திருமாலின் திருவடியே போற்றி போற்றி ................40

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி ........................................................ 41

25. திருப்பாவை பாசுரம் 25 -- தேவகீநந்தனுக்கே சேவகம் ........................................42

ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓர் இரவில் ........................................................ 43

26. திருப்பாவை பாசுரம் 26 -- கோதையின் தாயுள்ளம் ..............................................44

மாலே !மணிவண்ணா மார்கழி நீராடுவான் ........................................................ 45

27. திருப்பாவை பாசுரம் 27 -- சூடிக்கொடுத்து சூட்டிக்கொண்டாள்..........................46
கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன் தன்னைப்.............................................. 47
28. திருப்பாவை பாசுரம் 28 -- பக்தியோகத்தின் பெருமை.........................................48
கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்து உண்போம் ............................................. 49
29. திருப்பாவை பாசுரம் 29 -- சாஸ்வதமான பந்தம் .....................................................50
சிற்றஞ் சிறு காலே வந்துன்னைச் சேவித்து உன் ..................................................... 51
30. திருப்பாவை பாசுரம் 30 -- ஆழ்கடலின் முத்து..........................................................52
வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை....................................................... 53
எங்களைப் பற்றி ..........................................................................................................54
உங்கள் புத்தகங்களை வெளியிட ...............................................................................61

## 1. திருப்பாவை பாசுரம் 1 -- பறைதரும் பரந்தாமன்.

பாசுரங்கள், பக்திக்கதைகள், திருஅவதார நிகழ்வுகள் முதலியவை. மீண்டும் மீண்டும் சொல்லப்படுவதாலும் கேட்கப்படுவதாலும் ஆழ்மனப் பதிவுகள் சீராகின்றன.

நாராயணன் பறை தருகிறான். பறை எனும் சொல்லுக்கு பலவிதமாக பொருள் சொல்லப்படுகிறது. பரிசு, சன்மானம், வாக்கு, அருள், வலிமை என நீள்கிறது.

பொக்கிஷமான ஏதோ ஒன்றை அவன் நமக்குத் தருகிறான் என்று புரிந்து கொள்ளலாம். நமக்குப் பொக்கிஷமானது, நம்மிடம் இல்லாதது, அவனிடம் மட்டுமே இருப்பது, ஞானமும், தெளிவும், பக்தியும் இன்னபிறவும். இவை தான் சன்மானங்கள். இவை தருவதாக அவன் நமக்கு வாக்களிக்கிறான், அனுகிரகம் புரிகிறான்.

பாவை நோன்பு நோற்கும் கன்னியருக்கு விரும்பியது கிட்டும். பிடித்த துணை அமையும். கண்ணன் இதையெல்லாம் செய்வான். கூடவே உங்களுக்கு புரியாததும், தெரியாததும் கூட வழங்கப் பெறுவீர்கள் என்று மறைபொருளாக உணர்த்துகிறாள். இகலோக விருப்பங்கள் நிறைவேறும் என்று கூறி, நம் கவனத்தைத் பக்தியின் பக்கம் நிலைக்கச் செய்து பின் பரலோக பிராப்திக்கும் இட்டுச் செல்கிறாள் ஆண்டாள்.

‘Sugar coated pills’ என்று சொல்வதுண்டு. மாத்திரை கசக்கும். புறத்தில் இனிக்கும். ஆனால் இங்கோ அருளப்படும் லௌகீக ஆசைகளே கசப்பு, உள்ளிருக்கும் பரமாத்ம அனுபவம் இனிப்பு. அந்த உண்மையைத் தான் நாம் இன்னும் உணரவில்லை.

இதுவெல்லாம் வேண்டுமா? அப்படியென்றால் பாரோர் புகழும் வண்ணம் சிறப்பாக, சீரான நெறிமுறைகளைப் பின்பற்றி அவன் திருவடிகளைப் பணிந்து விடு. அவனைப் புகழ்வதால் உனக்குப் புகழ். அவனைப் புகழ்பவரோடு இணைவதால் நீ மேன்மை பெறுகிறாய்.

புகழ். அழகான சொல். அனைவருக்குமே போதையூட்டுவது. ஆனால் இங்கு குறிப்பிடப்படும் புகழ் போதை தருவதல்ல. ஆரவாரமான புகழ் அல்ல. லௌகீகமான புகழ் அல்ல. இது பெரும்புகழ். நீள்புகழ். சிறப்பானதும், நிரந்தரமானதுமான தெளிந்த, அமைதியான புகழ். அப்படிப்பட்ட புகழை வேண்டாதவர் யார்! எப்படிக் கிடைக்கும் அந்தப் புகழ்? நாராயணனே கதி என்று பக்தி செய்தால் அவன் நமக்கு பறை தருவதால் நமக்கு வந்து சேரும் நீங்காப் புகழ்.

***

**மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்**
நீராட போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர் மல்கும் ஆய்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர் வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்து ஏல் ஓர் எம்பாவாய்.***

***

## 2. திருப்பாவை பாசுரம் 2 -- பாவை நோன்பு

வீட்டைக் கட்டிப்பார் என்பார்கள். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சிறுகச்சிறுக சேமித்து, உழைப்பிலே உயர்ந்த வீடு. வாயை கட்டுவது என்பது கண்டதை தின்னாதிருத்தல், தேவையற்றதை பேசாதிருத்தல், இப்படிச் செய்தால், வயிறும் கட்டுபடும். உண்பது செரிக்கும். பண விரயம் தவிர்க்கப்படும். சேமித்த பணத்தைக் கொண்டு நமக்கென்ற தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். நிலையற்ற செல்வத்தை சிறிதுகாலம் நிலைக்கச் செய்யவே இவ்வளவு கட்ட வேண்டியிருக்கிறது. சேமிக்க வேண்டும். கவனமாக செலவு செய்ய வேண்டும். அத்தியாவசியங்களைத் தவிர அனாவசியங்களைத் தவிர்க்க வேண்டும்.

நிலையான அந்த எம்பெருமானை சேவிப்பதென்பது எளிதா? பெருவீடு என்பது எளிதா? எளிது தான். நோன்பு இருப்பவர்களுக்கு. எப்படிப்பட்ட நோன்பு?

பாமரனாக நலிந்திருக்கும் நம் மேல் கருணைக் கொண்டு, தானே குருவாகி நோன்புக் கிரியைகளை அறிவுறுத்துகிறாள் ஆண்டாள். பாலும் நெய்யும் புஷ்டி சேர்ப்பவை. வளமானவை. செழித்தவைகளையும் பிடித்தவைகளையும் துறக்க வேண்டும். சோறு உண்ணாதே எனச் சொல்லவில்லை. Rich food என்று வகைப் படுத்தப் பட்டவைகளை தவிர்க்க சொல்கிறாள். அத்தியாவசியங்களைச் செய். அனாவசியங்களைத் தவிர்த்து விடு.

விடியற்காலை குளிர் நீராடு, தூய ஆடையை நேர்த்தியாக உடுத்து. ஆனால் கண்ணுக்கு மையிட்டு எழுதவேண்டிய அவசியமில்லை, மலரிட்டு முடிந்து அலங்கரித்துக் கொள்ளுதலை தள்ளிப் போடு. அலங்காரங்கள் அவசியமில்லை. (அலங்காரங்கள் என்பது புலன்களுக்கு தேவைப்படும் இன்பங்கள் என்று உணர்ந்து கொள்ளலாம்) இப்படி இருந்தால் அகத்தூய்மையுடன் புறத்தூய்மையும் சித்திக்கும். தேவையானவற்றை மட்டுமே செய்வதால், ஐம்புலன்களின் ஓட்டமும் சிதறலும் தவிர்க்கப்படும். இப்போழுது ஒரே நோக்கம் தான். அவனை நினைக்க வேண்டிய பரிபூரண கவனம், பக்தி.

செய்ய வேண்டியவற்றை செய்யவதும், செய்யக் கூடாது என்று பெரியோர்கள் தடுப்பவற்றை செய்யாதிருக்கவும் வேண்டும். தீய பேச்சை தவிர்க்க வேண்டும். எளிய முறையில் உணவு சமைத்து, இல்லாதவர்க்கு பகிர்ந்து, இவ்வாறாக நாம் சிறந்த நோன்பிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் விரும்பிச் செய்து, பரந்தாமன் அடி பற்றும் எண்ணமும் வலுப்பெற்றால், சித்தமும் சுத்தமாகி நோன்புக்கு தயாராகி விடும்.

எப்பொழுதெல்லாம் செய்வது? முப்பொழுதும். எப்பொழுதும்.

****

**வையத்து வாழ்வீர்காள் !நாமும்நம் பாவைக்கு**
செய்யும் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்!

****

## 3. திருப்பாவை பாசுரம் 3 -- மாசற்ற செல்வம்

வாமன அவதார மூர்த்தி, உருவில் சிறியதாக இருந்தார். கீர்த்தியில் பெரியவர். மூவலகை அளந்தவர், விருட்சமென வளர்ந்து நின்ற பக்தனது அகங்காரம் எனும் "மாசு"தனை நொடிப்பொழுதில் இல்லாதொழித்து ஆட்கொண்ட காருண்யன்.

நெறிதவறாத மாந்தர் வாழுமிடத்திலெல்லாம் திங்களுக்கு மூன்று முறை மாரி பொழிந்து, வளம் பெருகி எங்கும் இன்பம் நிறையும். தவமும் சீலமும், நோன்பும் நல்கும் ஆகச் சிறந்த பயன்கள் இவை. ஞானிகளாலும், தவச் சீலர்களாலும், அமைதியான ஆடம்பரமற்ற எளிய வாழ்வு வாழும் இல்லறத்தாராலும், பேணி காக்கப்படும் பூஜை நோன்புகள், நேர்மறை அதிர்வுகளை எழுப்பி, சுற்றுப்புறத்தை மாசற்றதாக்கி இறையருளை வாரி இறைக்கிறது. உத்தமன் பேர்பாடி நிற்கும் இவர்களே பரோபகாரிகள்.

பிரபஞ்சத்தில் உயர்ந்தோங்கி நிற்பவன் இறைவன். அவனே உலகுக்கு படியளப்பவன். அவன் பெயரை கொண்டாடினால் நமக்கும் படியளப்பான். திங்கள் மும்மாரி பெய்யும். நீர்வளம் பெருகும். இயற்கை வளம் கொழிக்கும். அவ்வாறு செழித்த நிலத்தில் பசுமைக்கு பஞ்சமில்லை. செழுமையான நெற்பயிர்களுக்கு பாய்ச்சிய நீரிலும் மீன்கள் நீந்தி விளையாடும். வளமான நிலத்தில் அழகிய குவளை மலர்கள் அலர்ந்திருக்கும், அதில் வண்டுகள் முயங்கியிருக்கும். ஆவின் வள்ளல்மடி நிரம்பச் சுரந்து, பால்பெருகி, குடங்கள் நிறையும். செல்வம் பெருகியதால், வயிறும் மனமும் திருப்தியுறும்.

நோன்பு நீராடிய பலனால் சுற்றுச்சூழலும் மாசற்று துலங்குகிறது. மண்வளம் பல்கிப் பெருகியதோடன்றி, அகத்து மாசும் நீங்கி, மனவளமும் வாய்க்கும். நீங்காத செல்வமான பக்தியும் ஞானமும் மெல்ல மெல்ல பெருகவும் காணப்பெறுவோம்.

இன்றைய வாழ்க்கை முறையையும், இயற்கைச் சீர்கேடுகளையும், இப்பாடல் போற்றும் வளமையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், எதையெல்லாம் இழந்திருக்கிறோம் என்று புரியும்.

****

***ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி***
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெறும்செந் நெல்ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.
****

## 4. திருப்பாவை பாசுரம் 4 -- கேட்கும் ஒலியிலெல்லாம், நிந்தன் கீதமே

பளீரென்ற நீலவானத்தின் நடுநடுவே வெண்ணிற மேகத்திட்டுகள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே மேகங்கள் கருத்து, வானம் கருநீல வண்ணம் உடுத்தும் தருணம் எழிலானது. கவித்த்துவம் நிறைந்த காட்சியின் அழகை கண்கள் உள்வாங்கும் போதே, "கண்ணனின் கருநீல வண்ணம்" என்ற எண்ணமே எழுகிறது. நம்மைப் போன்ற முதிர்ச்சி அற்றவர்களுக்கே இந்தச் சிந்தனை இருந்தால், பூதேவியின் அம்சமான பூமகளல்லவா ஆண்டாள்.

காணும் காட்சியிலும், பேசும் பேச்சிலும், நெஞ்சத்து நினைவிலும், வாரணம் ஆயிரம் சூழ திருமணம் புரிந்த கனவிலும் கூட கண்ணனையே காணும் கோதைக்கு, ஆழிக்கடலும் கண்ணன். மேலேகி அதுவே பரந்தாமனின் நிறத்தையொத்த கருமேகமென உருக்கொண்டு, பொழியும் மழையாகக் கண்ணன். மின்னும் மின்னலும், முழங்கும் இடியும் மாதவனே.

பிரகாசமான சுதர்ஸன சக்கரத்தையொத்தது மின்னல். சங்கின் முழக்கமே இடி. அவனது சார்ங்க வில்லிலிருந்து பொழியும் அம்புகளாக மழை மண்ணைத் துளைக்கிறது. கண்ணனே மழையாகி மகிழ்விக்கிறான். அவனை வணங்கவும் அவனே அருள்செய வேண்டுமென இறைஞ்சுகிறோம்! "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" -- என்கிறது திருவாசகம்.

அருளை மழையாக்கி, அன்பை மழையாக்கி, சியாமள வண்ணனே நீர் பொழிவான். அதில் நனைவோம், நீராடி நோன்பு நோற்போம் வாருங்கள்.

.

***

**ஆழிமழைக் கண்ணா !ஒன்று நீ கைகரவேல்**

ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

## 5. திருப்பாவை பாசுரம் 5 -- பாடுவோமே பாசுரம் பாடுவோமே

விசேஷ நாட்களில் நமக்குப் பிடித்த உணவு வகைகள் சமைக்கப்படும் போது கவனமெல்லாம் அதன் மீதே இருக்கும். அலுக்கவே அலுக்காதது உணவு. இறைவனுக்கு படைத்துவிட்டு நாம் உண்ணும் வரை சிந்தனையெல்லாம் அதன் மீதே இருக்கும். இதுவே சாமான்னியன் நிலை.

ஏதோவொன்றின் மீது பற்று வைத்து விட்டால் கவனம் சிதறாமல் அங்கேயே ஒருமித்து விடுகிறது. காதல் நினைவில் வாடும் காதலர்களுக்கும் இதுவே பொருந்தும். பிரிவின் ஆற்றாமையை மட்டுப்படுத்த ஒருவரைப் பற்றி இன்னொருவர் சிந்தித்திருப்பதே தித்திப்பு. அன்புக்குரியவர்களைப் பற்றி பேசிக்கொண்டிருப்பதே ஆனந்தம்.

இறைவன் ஒவ்வொரு தனிப்பட்ட ஜீவனிடத்திலும் தூய அன்பைப் பொழிகிறான். அதனை உள்வாங்கி திரும்பவும் அவனிடம் அதீத அன்பு செய்வதே பக்தி. பக்தர்களைப் பற்றி பகவான் சிந்திப்பதும், பகவானைப் பற்றியே பக்தர்கள் சிந்திப்பதும் அளவிலா ஆனந்தம்.

பூமகளே தனது துணைவனான பெருமானைப் பற்றிப் பேச பூமியில் அவதரித்தார் என்பதே நமது பெரும் பாக்கியம். ஆண்டாள் வாயார தமது நாதனைப் புகழ, அதனை நாம் உணர்ந்து போற்றி நின்றோமேயானால் பிறப்பின் பெரும்பயன் பெற்றவர்களாகிறோம். நாச்சியாரே நமது குருவாகி ஒவ்வொரு நாளும் மாதவனைப் பற்றி பாமாலை சூட்டப் போகிறார். சீடர்களாகி நாமும் அதன் பொருளை நுகர்வோம்.

மதுரா நகரில் பிறந்தவனை, யமுனையாற்றங்கரையில் தவழ்ந்த இடையர் குலத்து விளக்கை, தாயாருக்கு பெருமை சேர்த்தவனை, வயிற்றில் கயிறு கட்டிய சுவடைத் தரித்ததால் தாமோதரன் என்று பெயர் பெற்றவனை, தூய நீராடி, நல்மலர் தூவி, வாயார அவன் புகழைப் பாடி, சிந்தையில் அவனையே அலங்கரித்து, தியானித்திருக்கச் சொல்கிறாள். அப்படி செய்தால் செய்த பாவங்களும், அணுகவிருக்கும் தீவினைளும் இல்லாமலே பொசுங்கிப் போகும்.
***

**மாயனை மன்னு வடமதுரை மைந்தனை**
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர்த் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்
***

## 6. திருப்பாவை பாசுரம் 6 -- விழித்தெழு ..பிள்ளாய் விழித்தெழு

பறவைகளுக்கு அலாரம் தேவையில்லை. நேரத்திற்கு ஓய்வெடுத்து, அதிகாலை இனிய நாதம் எழுப்பி, வைகரை விடியலை கானம் பாடியே வரவேற்கும். உறங்கும் நமக்குத்தான் பொழுதே தெரிவதில்லை. ஆழ்ந்த உறக்கம். பிறப்பு-இறப்பு சுழற்சியில் மாட்டிக்கொண்டு எழும்ப வேண்டும் என்ற எண்ணமே இல்லாத புத்தி தெளிவற்ற மயக்கம்.

சங்கம் ஊதியதும் இறைவனே நமை ஆட்கோள்ள வாவென்றே அழைப்பதை உணர்வதில்லை. உறங்கிக் கொண்டிருக்கிறோம்.

பிள்ளையே எழுந்திரு என்றே அன்னை நமை உறக்கத்திலிருந்து எழுப்புகிறாள். பூதகியின் முலைப்பால் உண்டு அவளை சமஹாரம் செய்தவன். சகடாசுரனை பிஞ்சுக் கால்களால் உதைத்து சமஹரித்தவன். அறிவாளிகளான யோகிகளும் முனிவர்களும் ஹரியென்றே தொழுதேத்திப் பணியும் நமது நாதன்.

அவனைப் பணிந்தால் நமதுள் விதையூன்றியிருக்கும் அசுரர்களும் க்ஷணத்தில் நமை நீங்குவர். துயர் நீங்கும். உறங்காதே! விழித்தெழு. ஹரி ஓம் என்றே துதித்தெழு.

*******

**புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்**
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய் எழுந்திராய்! பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்!
*******

## 7. திருப்பாவை பாசுரம் 7 -- நாயகப் பெண்பிள்ளாய், பேயுறக்கம் தகுமோ!

நாயகப் பெண்பிள்ளாய் என்று விளிக்கிறாள். தலை சிறந்தவளே! சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் நீயே பேயுறக்கம் கொள்ளலாமா? பேய் உறக்கம் என்பது விடிந்தபின் உறங்கும் உறக்கம். நள்ளிரவில் விழித்திருந்து, அதிகாலை அழைப்புக்கு நேரத்தே எழாத உறக்கம்.

பிரகாசமான முகத்தை உடையவளாம். கெஞ்சியும் கொஞ்சியும் ஆண்டாள் எழுப்புகிறாள். நீயே உதாரணமாகத் திகழ வல்லவள், நீ பேயுறக்கம் உறங்கலாமா?

இறைவனிடத்தே அபிமானம் கொண்டவர்களுக்குரிய லக்ஷணங்களும் அடையாளங்களும் சிலரிடத்தில் மிகுந்திருக்கும். ஆண்டவனிடம் மாறாத சினேகம் கொண்டு இலக்கணமாகத் திகழ்பவர்கள். இன்னும் முயன்றால் எழுந்துவிடுவார்கள். ஏனோ சமயத்தில் பேயுறக்கம் ஆட்கொள்கிறது.

வலியன் குருவிகள் கீசுகீசென்றே இனிய ஒலியெழுப்பி ஒன்றோடொன்று அளவளாவுகின்றன. நமை எழுப்ப முயலுகின்றன. இடைக்குலப் பெண்களும் மங்கல நாண் ஒலியெழுப்ப, மத்து கொண்டு தயிரைக் கடைகின்றனர்.

பாலைப் பதமாகத் தயிராக்கி, அதனைக் கடைந்து வெண்ணை திரண்ட பின் மீதம் இருப்பது மோர். மோர் என்பதே பரமாத்ம நிலையைக் குறிக்கும். அதுவே இறுதி நிலை. இன்னொன்றாக மாற்றமடையாத பிறவியற்ற உயர்ந்த நிலை. அதனை உணர்த்தும்படி மங்கல ஒலி எழுப்பி, உறங்கும் ஜீவனை எழுப்புகின்றனர் என்ற பொருளிலும் உணரலாம்.

கேசவா, நாராயணா என்று நாங்கள் பாடுகிறோமே!! கேட்டும் நீ உறங்கலாகுமா! எழுந்திரு. உன் கூட்டுக் கதவைத் திற. (காஞ்சி பரமாச்சாரியார் மோர் உதாரணம் எவ்வாறு உயரிய நிலையைக் குறிக்கும் என விளக்கியுள்ளார்)

*******

**கீசு கீசென்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து**
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ
நாயகப் பெண் பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய்.திற ஏல் ஓர் எம்பாவாய் !
****

## 8. திருப்பாவை பாசுரம் 8 -- கிழக்கும் வெளுத்தது!

நாச்சியார் தாயாருக்கே உரிய தயையுடன், கொஞ்சிக் கொஞ்சி எழுப்புகிறார்கள். எத்தனை வகையான மனிதர்கள்! எப்படியெல்லாம் உறங்குகிறோம்! ஆழ்ந்து உறங்கும் அழகிய நங்கை, கோதுகலமானவளாம். களிப்புடைய பாவையவள்.

கிழக்கு வெளுத்தேவிட்டது. எருமைகளும் மேய்ச்சலுக்கு வந்துவிட்டன. நீராடித் தூய்மை பெறும் எண்ணத்துடன் பலர் தயாராக உள்ள நிலையில் அவர்களையெல்லாம் காக்கச் செய்து, உனையே எழுப்ப வந்தோம். நீ இன்னும் உறங்கலாமா? நேரமாகிப் பொழுதும் போய்க்கொண்டே இருக்கிறதே!

கேசி எனும் அரக்கனை அழித்தவனவன். கேசி என்ற அரக்கன் மாயவடிவங்கள் எடுக்க வல்லவன். மாயாவிகளின் ரூபங்களை உணர்ந்து நொடிப்பொழுதில் மாய்க்க பராமாத்வினால் மட்டுமே முடியும். கேசியின் வாயைப் பிளந்த கேசவன். கம்சன் ஏவிய மல்வீரர்களை அழித்தவன். எப்பேர்ப்பட்டவன் என்று உணர்ந்தாயா! உனக்குள் உன்னையும் அறியாமலே பலவித வடிவமெடுக்கும் அரக்க குணங்களை க்ஷணத்தில் சாய்க்க வல்லவன்.

மாவீரன் என்று மட்டுமா நினைத்தாய்! தேவாதி தேவனவன். அவனை வணங்கினால் நம் குறைகளை களைந்து பெரருள் சித்திக்கும். எழுந்திரு. அவனைப் பாடிப் பணிவோம்.
******

**கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு**
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரை போகாமல் காத்துன்னை
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆஆ என்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்.
******

## 9. திருப்பாவை பாசுரம் 9 -- ஏமப் பெருந்துயிலில் மந்திரப்பட்டோமே

வளங்கள் நிறையப் பெற்ற மாளிகை. அதில் வளர்ந்த செல்லச் சிறுமி. மணிமாடத்துச் சுற்றத்தில் விளக்குகள் ஒளிர்கின்றன. நறுமணப்புகை நாசியைத் துளைக்கிறது. இனிய வாழ்வு அள்ளித் தந்த கிறக்கத்தில் மேலும் உறக்கதிற்கு ஆட்படுகிறாள்.

இன்பம் பெருகப் பெருக, அது தரும் மாயையில் கட்டுண்டு கிடப்பதும், ஜனனமெடுத்த நோக்கத்தை மறந்தே போவதும் நிகழ்வது தானே!

மாமன் மகளே! மணிமாடத்து செல்வ மாளிகையின் மணிக்கதவை திறவாயோ! அடடா! பெரியவர்கள் பக்கத்திலிருந்தும் ஏன் உறங்குகிறாள் ? பெரியவர்களே நல்ல புத்திமதிகள் சொல்லி அவளை எழுப்ப மாட்டீர்களா! நற்பாதையைக் காண்பிப்பது பெரியோரின் கடமை. மாமி அவளை எழுப்பு.

அவள் ஊமையா? இவ்வளவு கேள்வி கேட்கிறோம். பதில் சொல்ல மறுக்கிறாளே! இல்லை செவிடாக இருக்கும். செப்பிய எதுவும் செவிக்கெட்டவில்லை. ஒருவேளை சோம்பலுக்கு உட்பட்டாளோ! மந்திரத்தால் கட்டுண்டது போல் மயக்கத்தில் சிறையுண்டிருக்கிறாளே! மாதவனே வைகுந்தனே என்றவன் நாமங்களைச் சொல்லி உய்யவேண்டுமென்று உணர்வாளோ! அவளை எழுப்புங்களேன்!

எழுவது நமக்குத் தான் சிறப்பு. நாமாகவே எழ முயல்வது அரிது. நாச்சியாரே கருணை கொண்டு எழுப்பும் போது உறக்கத்திலிருந்து விடுபடுவது கூட எளிதாகிறது. இனியதாகிறது. எழுவோம்.

*****

**தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய**
தூமம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாழ்திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ அன்றி செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமன் பலவும் நவின்றேலோர் என்பாவாய்.

## 10.திருப்பாவை பாசுரம் 10 -- சொல்லும் செயலும்

மனம் என்னென்னவோ விரும்புகிறது. வாயும் தயக்கமின்றி அதைச்சொல்லி விடுகிறது. ஆனாலும் வைராக்கியம் வர மறுக்கிறது. சொன்னசொல் காப்பதில்லை. துயரம் வரும் போது பகவானை நாடுகிறோம். உனையன்றி வேறு யாரையும் நினையேன் என்றே சத்தியமும் செய்கிறோம். துயர் நீங்கி மகிழ்ச்சிப் பெருகும் போதோ, மகிழ்ச்சியிலே திளைத்துப் போகிறோம். உலக இன்பம் எனும் புதைகுழியில் விழுவது தெரிவதில்லை, மூழ்குவது உணர்வதில்லை. சொன்ன சொல்லையும் காப்பதில்லை.

இங்கேயும் ஒருத்தி, சொன்ன சொல் மறந்து துயில்கிறாள். நோன்பு நோற்று பணி செய்திருப்பேன் என்றாள். இறைவனுக்காக இல்லாவிட்டாலும் தனது நலன் கருதி நோன்பு நோற்று சுவர்க்கம் புகுவேன் என்றெல்லாம் அலங்காரச் சொற்கள் சொன்னாலும் உறக்கம் அவளையும் மீறி ஆட்கொண்டுவிட்டது.

நோன்பு நோற்பது நமக்காக. நாம் பக்தி செய்வதும் நம் நலனுக்காகவே. அவனைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும், அதனால் அவன் பாதிக்கப்படுவதேயில்லை. முகம் பார்க்கும் கண்ணாடி போன்றவனவன். நமது பிம்பத்தையே அவன் பிரதிபலிக்கிறான். நாம் பணிந்தால், அவன் செவி சாய்ப்பான். இவள் தூங்கிக் கொண்டிருப்பதால் தோழிகள் அழைப்பிற்கு பதில் பேசவில்லை. வாயிற்கதவை திறக்கவில்லை.

அளவிடமுடியாத பெரும் தூக்கத்தை உடையவளே! அந்த நாராயணன் ஸ்ரீராமனாக அவதரித்து, கும்பகர்ணனை ஆட்கொண்ட போது, கும்பகர்ணன் தன் தூக்கத்தை உன்னிடம் விட்டுப் போனானோ என்று கரிசனத்துடன் கிண்டலும் செய்கிறார்கள் ஆயர்க்குலப் பெண்கள். அழகிய ஆபரணத்தைப் போன்று பக்தர் குழாமுக்கு எழில் சேர்ப்பவளே, உறக்கம் தெளிந்து வந்து கதவைத் தாள்திறவாய்!

கும்பகர்ணனை விஞ்சும் நம்முடைய தூகத்தை அந்த ஸ்ரீராமனே வீழ்த்தட்டும்.

***நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்***
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால்
பண்டுஒருநாள் கூற்றத்தின் வாய்வீழ்ந்த
கும்ப கருணனும் தோற்றும் உனக்கே
பெருந்துயில்தான் தந்தானோ ஆற்ற
அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.
***

## 11.திருப்பாவை பாசுரம் 11-- பக்தர்களின் உறக்கம்

குற்றமற்ற கோபாலர்கள் குலத்தில் பிறந்த செல்வச் சீமாட்டி. குணசீலர்களின் பரம்பரை. பெரியோர்கள் சிறந்த குணவான்கள். பசுக்களும் கன்றுகளும் ஜீவனைக் குறிக்கும். அதை மேய்ப்பவன் இறைவன். நமை கண்காணிப்பவன். அப்படிப்பட்ட இடையர் பரம்பரை. வீரப் பரம்பரையாம். பசுக்கூட்டங்களை நல்முறையில் மேய்த்தவர்கள். தமது ஆன்மாவை நல்முறையில் வழி நடத்திச் சென்ற குணவான்கள். புகழ்மிக்க அத்தகைய குடியில் பிறந்த சுவர்ண கொடிபோன்றவள். இவளே ஒரு பாகவதப் பெண்.

மயில் போன்ற சாயலும், மெல்லிடையும் உள்ள அழகி. மயிலும் பாம்பும் கூட பெருமாளிடம் மிகுந்த அன்னியோன்னியம் உடையவை. இவளும் உள்ளத்திலும் சிறந்தவள், உருவத்தாலும் செயலாலும், பகவானுக்கு உகந்ததொரு நடத்தையுடையவள்.

எத்தகைய குணவானும் சிறப்புடையவனும், சமயத்தில் மோக-மாய வலையில் சிக்குவதைப் போல், சிறந்த புகழுடைய இப்பெண் தூங்குகிறாள். கண்ணைன் கார்மேக வண்ணனின் பெயரைப் பாடக் கேட்டும் நித்திரை கொண்டுள்ளாயே! அசையாமலும் பேசாமலும் இருக்கும் செல்வச் சீமாட்டியே, இந்த உறக்கம் தகுமா! இனி துயிலெழுதலே முறையன்றோ!

***

**கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து**
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றம்ஒன் றில்லாத கோவலர் தம் பொற்கொடியே
புற்றுஅரவு அல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வபெண்டாட்டிநீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்.

## 12.திருப்பாவை பாசுரம் 12 -- ஸ்ரீ ராமகீர்த்தனம் பாடுவோம்

பொன்னும் பொருளும் மட்டுமல்லாது, நஞ்சை புஞ்சை நிலங்களும், வேளாண்-தொழிலுக்கு உதவும் பசுக்களும் எருமைகளும் செல்வச் செழிப்பை குறிப்பாக உணர்த்த உதவுகின்றன. நிறைவான செல்வமாம் பசுக்களும் எருமைகளும் நிறைந்துள்ள வீட்டு மக்களாக இருந்தால், சீமான் வீட்டுப் பிள்ளைகள் தானே!

எருமைகள் தங்கள் கன்றுகளை நினைத்த மாத்திரத்தில் பால் சுரக்கிறது. செழுமையாக வளர்க்கப்பட்ட எருமை. பால் சுரந்தோடியதால் வீட்டைச் சுற்றி நீராலன்றி பாலால் சேறாகிக் கிடக்கும் செல்வந்தரின் செல்லத் தங்கை.

எருமைகள் சொரிந்த பால் இல்லத்து வாசலை சேறாக்குகின்றது. நிலையாக நின்றிட முடியாமல், சேறு வழுக்கிவிடும் என்றஞ்சி, வாயிற்கட்டையை பற்றியிருக்கிறார்கள் ஆயர்குலப் பெண்கள். மார்கழிப் பனிப்பெய்து அவர்கள் தலையெலாம் குளிர்ந்தேவிட்டது. இவளோ இன்னும் எழுந்தபாடில்லை. தமது அசௌகரியங்களையும் மீறி, இன்னொருவரின் நலனில் அக்கரை கொண்டுள்ள சிறந்த ஆயர்க்குலப் பெண்கள். எத்தனையோ இடர்பாடுக்களையும் தாண்டி அவர்களால் கடைபிடிக்கப்பட்ட நோன்பு இது.

புள்ளினம் எனும் பறவைகள் கூவியாகிவிட்டது. சங்கு ஒலித்தது. ஆனைச்சாத்தன் பேசரவமும் துவங்கிற்று. எருமைகள் பொறுமைக்கு உதாரணமானவை. அவையும் மிகப் பொறுமையாக மேய்ந்து வந்தாகிவிட்டன. பின்னர் தமது கன்றை நினைத்து பால்சுரந்து, அது வாசலிலும் முற்றத்திலும் ஆறாக வழிந்தோடி சேறாகவே ஆகிவிட்டது. அவ்வளவு நேரமும் இவள் எழுந்திருக்கவில்லை! இவர்கள் கூவிக் கூவி அழைப்பதை சுற்றத்தோரும் மக்கள் அறிந்து அவர்களும் வாசலில் கூடிவிட்டனர். யாருக்காகவோ விடுக்கப்படும் அழைப்பு வேறு யாரையெல்லாமோ எழுப்பும் அற்புதமிது!

இலங்கைத் தலைவனை கடுஞ்சினத்தினால் வீழ்த்திய ஸ்ரீராமனது புகழை இவர்கள் கீர்த்தனை செய்கிறார்கள். அதைக் கேளாமல் அவள் உறங்குகிறாள். இள நங்கைக்கு ஆழ்ந்த உறக்கம்! இன்னும் எழவில்லையாம். கண்டிப்பாக எழுந்து விடுவாள்.

***கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கு இரங்கி***
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழ நின் வாசல் கடைபற்றி
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோர் எம்பாவாய்.

## 13.திருப்பாவை பாசுரம் 13 -- அசுரர்களை வீழ்த்தும் பரந்தாமன்

தேவர்களுக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்கும் அரக்கர்களால் பெரும் தொல்லை. முந்தைய யுகங்களில் அரக்கர்களுக்கென்று தனி உலகம் இருந்தது. அடையாளம் இருந்தது. சத்திய யுகத்தில் அரக்கர்கள் வேறு லோகங்களில் வசித்ததாக சொல்லப்படுகிறது. திரேதா யுகத்தில் இதே பூலோகத்தில் வெவ்வேறு இடங்களில் வசித்ததாகவும், துவாபர யுகத்தில் ஒரே குடும்பங்களிலே அசுர-சுர குணங்களை உடையவர்களாகவும் இருந்தனர் என்று கருத்து.

கலியுகத்திலோ அரக்கர்கள் ஒவ்வொரு ஜீவனுள்ளும், குணங்களாக, வியாபித்திருக்கிறார்கள். கோபம், மோகம், மதம், மாத்சரிய குணங்களின் வழியே நம்மை கட்டுப்படுத்துகிறார்கள். ஒவ்வொன்றும் நாம் வெல்ல வேண்டிய பெரும் அரக்க வடிவங்கள்.

நாரை வடிவில் இருந்த பகாசுரன் எனும் அரக்கனின் வாய்பிளந்து கிழித்தெறிந்தான் கண்ணன். ராவணனின் தலையை கிள்ளி எறிந்தான் ராமன். கண்ணனும் ராமனும் நாராயணன் வடிவங்கள். ராவணன் அகங்காரத்தின் உருவம். பகாசுரன் அஞ்ஞானத்தின் வடிவம். இவற்றை நாமாக வெல்வது ஒருபுறமிருக்க, நாராயணனான ஆதிமூலனை, சரணம் என்று திரௌபதியைப் போல் அழைத்தால், அரக்கர்களை பிளந்தழிக்கவும், கிள்ளி எறியவும் உடனே நம் உதவிக்கு வருவது திண்ணம்.

வியாழன் மறைந்து விடிவெள்ளி முளைத்தது. இனி விடியல் துவங்கும். பறவைகள் அந்த நற்செய்தியை பாடிக் கொண்டாடுகின்றன. விடியலுக்கான பொழுது என்று ஆழ்மனம் உணர்ந்திருக்கிறது. ஆனாலும் சற்றே மலர்ந்த கண்ணில், அரைகுறை மயக்கமென தூக்கத்தின் மிச்சம் விட்டு விலகாமல் பற்றியிருக்கிறதே! அழகுப் பதுமையென உறங்குகிறாள். பதுமை என்ன செய்யும்? அதன் அறிவுக்கண் திறக்காததால், யாருடைய சங்கத்தில் இருக்கிறதோ அவரின் கைப்பாவையாக மாறும். ஆயர்க் குலப்பெண் பதுமையைப் போன்ற அழகுடையவள் அரைக்கண் மலர்த்தி உறங்குகிறாள். தோழிகளெல்லாம் நற்சொற்கள் உரைத்து, இறைவன் புகழ்பாடி அவளை எழுப்புகின்றனர். அவள் புண்ணியம் செய்தவள். சத்சங்கத்தில் இணைந்துவிட்டாள்.

******

**புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்**
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம் புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தே லொரெம்பாவாய்
*******

## 14.திருப்பாவை பாசுரம் 14 -- தடக்கையனை வணங்குவோம்

புழக்கடையில் தோட்டம் என்பதெல்லாம் சென்ற தலைமுறையுடன் கனவாகி விட்ட விஷயம். (புழக்கடை என்ற தூய தமிழ்ச் சொல்லை இன்றும் பலர் கையாளுகின்றனர்.) அந்த புழக்கடையிலுள்ளது எழில் மிகுந்த வாவி, அதாவது குளம். அக்குளத்தில் சூரியனைக் கண்ட தாமரை மலர்ந்து, சந்திரனைத் தொலைத்த அல்லி மூடுவதெல்லாம் ராஜாகாலத்து அரண்மணையின் நந்தவனக்காட்சி போல விரிகிறது. புழக்கடையே துர்லபம். அதில் வாவியும் மலர்களும் இனி கற்பனையில் மட்டுமே.

காவியுடை தரித்த அம்முனிவர்கள் வெண்மையானவர்கள். தூயத் துறவிகள். துறவிகளில் ஏறக்குறைய பலரும் தூய்மையாக இருந்த காலமது. சங்கு ஊதி தரணிக்கு விடியலை உணர்த்த புறப்பட்டுப் போகின்றனர். புழக்கடை வாவியில் அல்லி மூடி, தாமரை மலர்ந்து விட்டது. எல்லோருக்கும் முன்னமே எழுந்து, அனைவரையும் தான் எழுப்புவதாக இனிக்க இனிக்க பேசிச் சென்றவள், சொன்ன பெருமை மறந்து, நாணமற்றவளாகிப் போனாள்.

வாவியிலுள்ள தாமரையைப் போன்ற பங்கஜ நேத்திரத்தை உடைய கண்ணன். சங்கும் சக்கரமும் ஏந்தும் பெரிய கையுடையோன். ஏன் பெரிய கைகள்? அந்தக் கைகளே நமை ரக்ஷிக்கின்றன. தடுத்தாட்கொள்கின்றன. கோடான கோடி ஜீவராசிகளை பராமரிக்க, அணைத்து அபயமளிக்க, சங்கும் சக்கரமும் தாங்கி, நமை நோக்கி நீளும் பெரிய கைகள் அவனுடையது. அவனைப் பாட எழுந்து வாராய் தோழியே.

*****

***உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்***
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்

## 15.திருப்பாவை பாசுரம் 15 -- பக்தர்களுடன் இணைவோம்

பகவானுக்கே பணி செய்து கிடக்க நமக்கு தாகமிருக்கிறது. ஆனாலும் லோகத்து இச்சை விடவில்லையே! இங்கே இந்தப் பெண்ணைப் பாருங்களேன்! அனைத்து தோழியரும் திரண்டு வந்து எழுப்புகின்றனர். அவள் ஒன்றும் ஆழ்ந்து உறங்கவில்லை. ஆழ்நிலைத் தூக்கத்திலிருந்து விழித்து விட்டவள். உறக்கம் தெளிந்தாலும் மயக்கம் தெளியவில்லையே!

கிழக்கும் வெளுக்கத் துவங்கி விட்டது. பாவை நோன்பு நோற்கும் எல்லா ஆயர்ப் பெண்களும் திரண்டு வந்துவிட்ட நிலையில், மயக்கம் தெளியாத நிலையில் இருக்கும் இந்தத் தோழி ஒரு வாயாடிப் பெண். கோபியர் பாடும் தேமதுரப் பாசுரமும், இதமாக உறங்கிக் கிடந்த செவிக்கு, பளீரென்ற கூச்சலாக செவிப்பறையில் தெறிக்கிறது. மார்கழிப் பனியைப் போல சில்லென்று ஊடுருவுகிறது.

அடடா! சில்லென்று அழைக்காதீர்கள். இதோ வருகிறேன், என்று சற்றே படபடப்புடன் கூடிய துடுக்குத்தனமான பதில். வாயாடிப் பெண்! இப்பெண் எழுந்தும் விட்டாள், நன்று பதிலளிக்கிறாள். புறப்படுவதைத் தான் தள்ளிப் போடுகிறாள்.

உன் துடுக்குத் தனத்தையும் நீ கூறும் சாக்குப் போக்குக் கதைகளையும் நாங்கள் அறிவோம். அவர்கள் வம்பிழுக்க, நீங்கள் தான் வாய்ச்சொல் வலிமையுடையவர்கள். எனக்கென்ன, பெசவே தெரியாது எனப் பேச்சை நீட்டுகிறாள்.

இன்னும் வேளை வரவில்லை சிலருக்கு. இவளுக்கும் அப்படியே, தட்டிக் கழிக்கிறாள். சோம்பலால் தள்ளிப் போடுகிறாள். நேரமாகிறதே, சீக்கிரம் வா என்று உற்சாகப் படுத்தும் பக்தர்கள். எல்லாரும் வந்தாகிவிட்டதா என்ற எதிர்வினா விடுக்கிறாள். ஆம் நீயே வந்து கணக்கெடுத்துக் கொள்ளேன்! உனைத் தவிர உலகமே இங்கு இருக்கிறது, நீ ஒருத்தி தான் இன்னும் வராமல் அடம் பிடிக்கிறாய்!

வலிமை மிகுந்த குவலயாபீடம் எனும் யானையை வென்றவனை, பகைவர்களை அழிக்க அற்புத லீலைகள் புரியும் மாயவனை, மாதவனைப் பாடுவதே உன் வேலையாக இருக்க வேண்டும். வேறென்ன வேலையுனக்கு! புறப்பட்டு வா. அவள் அடம்பிடிப்பது இனி செல்லுபடி ஆகாது.

கோதை நாச்சியார் முதலில் ஆழ்ந்து தூங்குபவர்களை தட்டி எழுப்புகிறாள். பின்னர் அரை மயக்கத்திலிருப்பவர்களுக்கும், விழித்தும் கூட சோம்பலுக்கும் ஆசைக்கும் ஆட்பட்டு உய்ய மறுக்கும் பக்தர்களுக்கும் பொறுமையாக அழைப்பு விடுக்கிறாள்.

பக்தர்களுக்குத் தான் எத்தனை கருணை. தாம் மட்டும் உய்வதை ஒருபோதும் அவர்வகள் விரும்புவதில்லை. உலகமெலாம் உய்யவேண்டும். பகவான் நாமத்தை ஊரெல்லாம் பரப்பி உச்சரிக்கத் தூண்டுவார்கள். எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் பரந்த குணம். இந்த பரந்த குணமே, அவர்கள் இறைவனை நோக்கி விரிவடைவதற்கான சாட்சி.

இதோ எல்லோருமாக கிளம்பிவிட்டனர். நாமும் சேர்ந்து செல்வோம்.

***

**எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ**

சில்லென்று அழையேன் மின் நங்கைமீர் போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்
வல்லீர்கள் நீங்களே நான் தான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கு என்ன வேறு உடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்து எண்ணிக் கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்று அழிக்க
வல்லானை மாயானை பாடு ஏல் ஓர் எம்பாவாய்.

***

## 16.திருப்பாவை பாசுரம் 16 -- நுழைவாயில்

இறைவனைப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் நோன்பு நோற்கும் பாவையர் அனைவரும், கோவில் வாயிலை அடைந்தனர். தலைவனாம் இறைவனின் இல்லத்தை நோக்கிய பயணம். பரமாத்வும் ஜீவாத்மாவும் இணைவதென்பது படிப்படியாக நிகழவேண்டியது.

நமது உள்ளத்தே எழும் தடைகள், இல்லத்தில் எழும் இடர்கள், சுற்றுப்புற சூழலால் வரும் தாமதங்கள், இவற்றை கடக்க வேண்டியுள்ளது. அப்படியே கடந்தாலும், அருள்சுரக்க வேண்டுமென்றால் தெய்வங்களை அடைய தேவதைகளை வெண்டி நிற்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

தேவதா ஸ்வரூபங்கள் தெய்வத்துக்கு பணி செய்து கிடப்பவர்கள். இறைவனின் தலையாய பக்தர்கள். இறைவனின் தரிசனத்துக்கு இவர்களிடம் பணிவுடனும் அன்புடனும் அனுமதி வேண்ட வேண்டும். வாயிலை அடைந்த பெண்கள், வாயிற் காப்பானிடம் இனிமையாக உரையாடிய செய்தியை இப்பாசுரம் சொல்கிறது.

தோரணங்கள் அசைந்தாடும் அழகிய இல்லத்து வாசல். தலைவனாம் இறைவனின் இல்லம். எப்படிப்பட்ட இல்லம்! மணிகள் பொருந்திய கதவைத் தாங்கிய இல்லம்! கதவுக்கு மணிகள் ஏன்?

நமது எளிய வீடுகளுக்குக் கூட அழைப்பு மணி இருக்கிறதே. அவன் வீடு என்பது பரமபதம். அப்பரமபதத்தை கோடானகோடி பக்தர்கள் அனுகூணமும் அணுகிக் கொண்டே இருக்கும் பெருவீடு. இல்லத்து வாயிலில் அனேக மணிகளைத் தாங்கியிருக்கும் மணிக்கதவு. ஒவ்வொரு மணியும் இறைவனை அழைக்கக் கூடிய அற்புத கிண்கிணிகள். தொட்ட மாத்திரத்தில் இறைவனின் கவனத்தை ஈர்க்ககூடிய கதவு. அந்த மணிக்கதவோ மூடியிருக்கிறது.

அனுமதியின்றி அதனுள் நுழைய முடியாது. கதவைத் தொடக் கூட சாத்தியமில்லை. பெண்களெல்லாம் தங்களுக்கு மாதவனை முன்னமே தெரியுமென்று எடுத்துரைக்கிறார்கள்.

மாயங்கள் செய்பவனாம், நீலமணி வண்ணனாம் எங்கள் கண்ணன் நேற்றே வாக்களித்திருக்கிறான். பறைமுரசை எளிய ஆயர்சிறுமியரான எங்களுக்கே பரிசளிப்பதாக சத்தியம் செய்து கொடுத்திருக்கிறான் தெரியுமா! எங்களை அனுமதியளியுங்கள். நம்பிக்கையுடன் வந்திருக்கும் எங்களுக்கு இல்லையென்று அவசரப்பட்டு மறுத்து, அவனை வாக்கு தவறச் செய்யாதீர்கள். புனித நீராடி பரிசுத்தமாக வந்திருக்கும் நாங்கள், சுப்ரபாதம் பாடி அவனைத் துயிலெழுப்ப வந்துள்ளோம், நிலைக்கதவை திறவுங்கள். திறக்கட்டும். காத்திருப்போம்.

**நாயகனாய் நின்ற நந்தகோப னுடைய**
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்!
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மாநீ!
நேய நிலைக்கதவம் நீக்கேலோர் எம்பாவாய்!
****

## 17.திருப்பாவை பாசுரம் 17 -- கண்ணா, கண் பாராய்!

இறைவனை ஆயர்குலத்து விளக்காக உருவகப்படுத்தி, கோகுலத்து கண்ணனின் வீட்டில் நுழைந்து அவனை எழுப்பும் விதமாக பாசுரங்கள் பாடுகிறார்கள்.

நமது உறக்கம் அஞ்ஞான நிலை. விழிப்பற்ற உறக்கம். இறைவனின் உறக்கம் யோக-நித்திரை. பூர்ண விழிப்புடன் கூடிய கால-நேர நிமித்தங்களை, கட்டுப்பாடுகளை கடந்த பரிபூரண உணர்வு நிலை. அவன் அனந்த சயனன். பரிபூரணன். அனைத்தும் அறிந்தவன். அவனே பூவுலகில் அவதரித்து நமைப் போல் உண்பதும் உறங்குவதுமாக நடிக்கிறான்.

நந்தகோபர் எப்பேர்பட்ட வள்ளல் என்பதை பாடிப் புகழ்ந்து துயிலெழுப்புகிறார்கள். ஆயர் குலத்துக்கெல்லாம் தேவையை வழங்குபவரே, நந்தகோபரே, எழுந்திருங்கள். எங்கள் தேவையெல்லாம் கண்ணன் தான். அவனை எழுப்புங்கள்.

மெல்லிய முல்லைக்கொடியின் தளிர் போன்ற மென்மையான உள்ளம் கொண்ட ஆயர்குலத்து விளக்கே, வழிகாட்ட வந்த யசோதைத் தாயே, எங்கள் நிலையுணர்ந்து எழுந்திருங்கள்.

யசோதையும், நந்தகோபரையும் இறைவனை எழுப்ப வேண்டும் என்று விண்ணப்பிக்கும் ஆண்டாள், தரிசனம் தரும் போது பலராமருடன் தரவேண்டும் என்கிறாள். பலராமரே ஆதிசேஷனின் அம்சம். ஸ்ரீமன்நாராயணன் ஆதிசேஷனின் மீதே அனந்த சயனம் செய்பவன், அதிசேஷன் துணையில்லாது பூவுலகிலும் விசேஷ அவதாரங்கள் நிகழ்வதில்லை. ஆதிசேஷனுடன் கூடிய எம்பெருமானின் தரிசனம் வேண்டி நிற்கின்றனர். சிறந்த பொன்னாலான சிலம்பையணிந்த பலராமரே நீங்களும் உங்கள் தம்பியும் எழுந்து எமக்கு தரிசனம் தர வேண்டும்.

மூவுலகம் அளந்தவன். விண்ணைப் பிளந்து தேவலோகத்தில் திருவடி பதித்த தேவர்கள் தலைவன் எங்கள் மன்னனாம் மாதவனே நீங்கள் யோக நித்திரையிலிருந்து விழித்து பலராமருடன் எங்களுக்கு தரிசனம் தாருங்கள்.

இறைவனை அணுகிவிட்டோம். அவன் யோக நித்திரையிலிருந்து விழித்து, அவனது குளிர் கடைக்கண் பார்வை, நம்மீது படவேண்டும் என்று துதிக்க வேண்டும்.  மாதவனே, மனம் திறவாய்,  முரளீதரனே,  கண்பாராய்.

****

*அம்பரமே, தண்ணீரே, சோறே, அறஞ்செய்யும்*
எம்பெருமான் நந்தகோ பாலா, எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குல விளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்!
செம்பொற் கழலடி செல்வா! பலதேவா!
உம்பியும் நீயுன் உறங்கேலோர் எம்பாவாய்!
****

## 18.திருப்பாவை பாசுரம் 18 -- நப்பின்னையின் நாயகன்

நீலக்கடலின் மடியில் தவழும் அலைகள், தெளிந்த வானத்தில் நிலவொளியின் எழில், கஜமுக கணபதியை நினைவுறுத்தும் கம்பீரமான யானைகள், இவையெல்லாம் என்றும் புதியவை, இனியவை. ரசிக்கப் படுபவை. தன் வயமிழந்து மதம் பிடிக்காத வரை, யானைகள் மிகவும் அழகானவை, நட்பானவை. மதம்பிடித்த யானைகளோ ஆபத்தானவை.

யானைகளும் மனிதர்களைப் போலவே. அரக்க குணம் கொண்ட ஜீவனையே மேய்க்கும் கோபாலனவன். யானைகள் எம்மாத்திரம்! மதம் கொண்ட யானையை தன் கட்டுக்குள் வைத்திருப்பவன். பிரபஞ்சத்தையே தனது தோளில் தாங்குபவனல்லவா! வலிய தோள் உடையோன்.

அவ்வளவு பெருமை வாய்ந்தவனின் மனையவள் எவ்வளவு பெருமை வாய்ந்தவளாக இருக்க வேண்டும்! நப்பின்னை என்பவள் கண்ணனின் அஷ்ட பத்தினிகளுள் ஒருத்தி. சத்யா எனும் நாக்னஜிதியையே தெற்கே நமது ஆண்டாள் நப்பின்னை என்றழைக்கிறாள். ஸ்ரீ விஷ்ணுவின் முப்பெரும் தேவியராம், பூதேவி, ஸ்ரீதேவி, நீளாதேவியரில், நீளா தேவியின் அம்சமாக நப்பின்னை அவதரித்தாள்.

நீளாதேவிக்கு நிறைய பெருமையுண்டு. பெருமானின் அன்பை வென்றவள். மிகுந்த பொறுமைசாலி. தாயாரை நாடிய பிறகே பெருமாளை தரிசிக்க வேண்டுமென்று உணர்ந்த ஆண்டாள், இப்பாசுரம் முழுவதும் தாயாரின் பெருமையை எடுத்துரைத்து யசோதையின் இளஞ்சிங்கத்தை எழுப்ப எத்தனிக்கிறாள்.

நப்பின்னை பிரட்டியின் கூந்தலில் சூடிய மலர்களின் வாசம் மூடிய கதவின் வழியே நாசியைத் துளைக்கிறது. கோழி கூவுவதையும், மாதவிப் பூக்களைத் தாங்கியிருக்கும் பந்தலில் அமர்ந்து குயில்கள் கானம் இசைப்பதையும் நீ அறிந்திருப்பாயே! பிரட்டியே, பூப்பந்தை கையிலேந்தி பெருமானுடனும் விளையாடிய விளையாட்டில் வெற்றிக் களித்திருப்பவளே! உன் மைத்துனன் புகழ்பாட நாங்கள் காத்து நிற்கிறோம். உன் மென்மையான தாமரைக் கைகளின் அழகிய வளைகள் ஒலிக்க கதவைத் திறந்து எமக்கு தரிசனம் தாராய்.

(குறிப்பு: மைத்துனன் எனும் சொல்லை பழந்தமிழ் பாசுரத்தில் கணவன் என்ற பொருளில் பயன்படுத்தியிருப்பதைப் பார்க்கிறோம்)

***

**உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்**
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தன காண்! மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயில் இனங்கள் கூவின காண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து ஏல் ஓர் எம்பாவாய்

***

## 19.திருப்பாவை பாசுரம் 19 -- திவ்ய தம்பதியர்

குத்துவிளக்கின் ரம்யமான ஒளி எங்கும் பரவியிருக்கிறது. பிரட்டியும் பெருமானும் இருக்குமிடத்தில் குத்துவிளக்கின் குளிர்தீபமாக அவர்களது பேரன்பே ஜோதியாக ஒளிவீசுகிறது. ஆயர்குலத்துப் பெண்களுக்கோ தரிசனம் கிட்டும் வரை இதயம் மலராமல் இருள் சூழ்ந்திருக்கிறது.

யானையின் தந்தத்தால் அலங்கரிக்கப்பட்ட கால்களையுடைய கட்டில். ஒருவேளை அவன் வலிமையை உணர்த்திய குவலயாபீட யானையின் தந்தமாகக் கூட இருக்கலாம். அவன் திருக்கரங்களால் வதம் செய்யப்பட்ட ஜீவனெல்லாம் இறைவனையே அலங்கரிக்கும்.

கட்டிலில் சுகமாக சயனித்திருக்கும் இருவரின் கருணையை வேண்டி நிற்கிறார்கள். நப்பின்னை பிராட்டியே நீங்கள் சுகமாக சயனித்திருக்கிறீர்கள், எங்கள் நிலைமை அப்படியா! தரிசனம் வேண்டி நிற்கும் எம் மேல் கரிசனம் காட்ட மாட்டீர்களா!

கிருஷ்ணனின் அருட்பார்வை கிடைக்கும் நேரத்தில் நப்பின்னை தன் மையிட்ட விசாலமான தாமரைக் கண்களால் பகவானை மயக்கி, எழுந்து போகவிடாமல் தடுக்கிறாள்.

இது நியாயமா பிராட்டியே! அவன் பிரிவை க்ஷணநேரம் தாங்கமாட்டாமல் உன் மணவாளனை எம்மிடம் அனுப்ப மறுக்கிறாயே! தாயே, இது உன்னுடைய ஸ்வரூபமல்லவே. நீயே தயாபரி! எமைத் தடுத்தாட்கொண்டு பெருமாளிடம் நீயே பரிந்துரைத்து, எமது குற்றங்களை பொறுத்து ரக்ஷிக்கத் தூண்டுபவள். நீ இப்படி செய்யலாமா!

நாம் சூடும் பூக்களெல்லாம் மலராத நமது ஞானத்தைப் போல் சட்டென்று வாடிவிடுகிறது. ஆனால் அதிகாலையில் மஞ்சத்திலிருந்து எழும் பொதும் நப்பின்னையின் கூந்தலிலுள்ள பூக்கள் மலர்ந்து நறுமணம் பரப்பியிருக்கிறதாம். கமலக்கண்ணனின் மனையவளாயிற்றே! அவளது கருங்கூதலில் எழிலாக ஏறியிருக்கும் பூக்கள் நித்தம் மலர்ந்த வண்ணமே இருப்பதில் ஆச்சரியம் என்ன!

பஞ்சுமெத்தையின் மேல், நறுமலர்ந்த பூக்களை சூடியிருக்கும் நப்பின்னையின் நெஞ்சத்தையே மஞ்சமாக்கி, கண் உறங்கும் கமலநாதனே, பிராட்டியின் நெஞ்சத்தில் உனைத் தவிர யாரே குடியிருக்க வல்லார்! அதை நினைந்து காதலின் பெருக்கில் மலர்ந்த மார்பினனாகப் சயனித்திருப்பவனே, நாங்களும் உன் பிரிவைத் தாங்காமல் வாடி நிற்கிறோம். உன் திருவாய் மலர்ந்து எமக்கும் நல்வார்த்தை கூறு.

**குத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டில் மேல்**
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கை மேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்
மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்
எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய்

****

## 20.திருப்பாவை பாசுரம் 20 -- பக்தவத்ஸலனே துயிலெழுவாய்

பக்தன் குரல் கேட்டு பறந்து வரும் எங்கள் பரந்தாமனே! தேவர்கள் நீ இட்டபணி செய்து, உன் பக்தர்கள் குறை தீர்க்கவே பார்த்திருக்க, ஏவல்கள் ஏற்கும் தேவதைளும் தங்கள் முறை வருமென்று, அடியவர் துயர் தீர்க்க ஓடோடி வருவதற்கே காத்திருக்க, ரக்ஷிக்கும் பணிகளை சீரிய முறையில் பிரித்தளித்த பின்னரும், பாகவதர்களின் அழைப்பிற்கு முந்திக்கொண்டு அருள்செய வரும் ஆதிமூலமே, துயில் எழுவாய்.

உன் தன்மை உணராதவர்க்கோ நீ காலனாகிறாய். உன் நினைவே பயத்தை வரவழைக்கிறது. நடுநடுங்கிப் வியர்வையில் நனைந்து போகிறார்கள். அப்பேர்ப்பட்ட பெருமையுடைய தூயவனே எழுந்திரு.

திருமகளின் அழகையொத்த நீளாதேவியே! எழில் குலையாத மென்மையான தனங்களை உடையவளும், மாதுளை போன்ற சிவந்த அதரங்களும், கொடி போன்ற இடையும் கொண்ட நங்கையே, எழுந்திருங்கள்.

உலகையாள்பவன் அவனுக்கு கண்ணாடி சேவை செய்தால், பிம்பமாகத் தெரிவதெல்லாம் பிரபஞ்சத்தின் பெருங்காட்சியாக இருக்கும். யசோதைக்கு கிட்டிய பெரும்பேறதனை, கண்ணாடி சேவை செய்து நாமும் பெறலாம்ன்றோ!

நப்பின்னை மணாளனே, அலங்காரங்களை ஒத்தி வைத்து மையிட்டெழுதாமல், மலர்களை நாளைக்கென சேமித்து, உம்மையே நாடி, உமக்கு சேவை செய்ய வந்திருக்கிறோம். உபசாரங்கள் அனைத்தும் உமக்கே. சாமரம் விசிறி உமை குளிரச்செய்து, திருமேனியழகை தரிசிக்க கண்ணாடி காட்டி உபசாரங்கள் செய்யவே ஆவலாக நோன்பு நோற்றோம். இவற்றையெல்லாம் எமது தாயாரே, பிராட்டியே, நீங்களே கொடுத்தருள வேண்டுமல்லவா. திருப்பள்ளி எழுங்கள்.
****

**முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று**
கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்
செப்பம் உடையாய் திறல் உடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்
செப்பென்ன மென் முலை(ச்) செவ்வாய்(ச்) சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய்.

***

## 21.திருப்பாவை பாசுரம் 21 -- பக்தரிடம் சிக்கிய பகவான்

யானைகளை, எருதுகளை, அஞ்ஞானத்தின் வடிவான நாரை முதலிய அசுரர்களை தோள் வலிமையாலே வீழ்த்தும் இறைவன், பசுக்களை மட்டும் மேய்க்கிறான்.

பசுக்கள் அடியவர்களை குறிக்கும். சாதுக்களை, முக்தியடையத் துடிக்கும் ஜீவனைக் குறிக்கும். இவற்றை மேய்ப்பவனாக இறைவன். பசும்புற்கள் மேயச் செய்து, பசியாற்றி, அவற்றைத் தட்டிக்கொடுத்தே மேய்ப்பவன். அவற்றிற்காக குழலூதி ஞானம் வழங்குபவன். அவன் ஊதும் குழலில் மயங்கியிருப்பவை பசுக்கள்.

கண்ணனின் கைபட்டதாலேயே கோகுலத்துப் பசுக்களெல்லாம் ஞானப்பால் சுரக்கிறது. பால் சுரந்து பொங்கி வழிகிறது. இன்னுமின்னும் அதிகம் பால் சுரக்கும் வள்ளல் பசுக்களை உடைய நந்தகோபன் மகனே!..நாங்கள் உங்கள் பக்தர்கள் என்று உணர்ந்து எழுவாய்.

உலகத்தின் முதல் வித்து அவன். பெரியவன். மூத்தோன். இப்பிரபஞ்சமும் அண்ட சராசரமும் அவனுடைய விழுது. படைப்பதும், காத்து நிற்பதும், சம்ஹரிப்பதும் மூப்பெரும் தொழில்கள். ஆற்றல் மிகுந்தவை. அவற்றை விடவும் ஆற்றல் மிகுந்த தொழில் ஏதேனும் உள்ளதா என்ன! ஒட்டுமொத்த ஆற்றல்சக்தியின் ஏக உருவம். உலகத்தின் ஒரே ஒளிச்சுடர்.

வலிமையிழந்த பகைவர்கள் உன் வாசலில் உன் பாதத்தில் விழுந்து பணிவது போல், பணிந்து நிற்கிறோம். உன்னை ஸ்துதி செய்கிறோமே, உன் பக்தர்களல்லவா நாங்கள். விளையாடுவதும் பக்தர்களை சோதிப்பதும் பரந்தாமனுக்கு அழகா! திருப்பள்ளி எழுந்துவிடு.

எழும் வரை விடமாட்டார்கள். பகைவர்களைப் பொல் வலிமையிழந்து இவர்கள் அழைக்கவில்லை. அன்பால் அழைக்கும் ஸ்தோத்திரம். எழாமல் இருக்க முடியாது. பாகதவப் பெண்களின் அன்புப் பிடியில் வசமாக மாட்டிக்கொண்ட பாண்டுரங்கன். ஏறக்குறைய அன்பால் மிரட்டுவது போல் 'அறிவுறாய்' என்று உரிமையோடு கருணை வேண்டுகிறார்கள்.

***

**ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப**
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்!
ஊற்றம் உடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்து உன்னடி பணியுமாப் போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய்

****

## 22. திருப்பாவை பாசுரம் 22 -- கண்ணாமூச்சி விளையாட்டு

அகண்ட உலகத்தையே தமது குடையின் கீழ் அரசாட்சி புரிவதாக இறுமாந்திருந்த அரசர்கள் என்று இங்கு புவியரசர்கள் மட்டுமல்ல, பிரபஞ்சத்தை ஆளும் தேவதேவர்களையும் குறிப்பிடுகிறாள். இந்த அரசர்கள் அவர்களது அகங்காரங்களை தொலைத்த பின்னரே, பெருமைகளைத் தூர எறிந்து, பெருமாள் அடி தொழுது  சிரம் கூப்பி பணிந்து நிற்கின்றனர்.

அவர்களைப் போல  நாங்களும் உன்னடிப் பணியவே இங்கு திரளாகக் கூடியிருக்கிறோம். சங்கமாகத் திரண்டு வந்திருக்கிறோம். எண்ணிலடங்கா பக்தர்களெனக் கூடி தூயபக்தியை பெய்து நிற்கிறோம்.

கிண்கிணிகள் வாய் எவ்வாறு பாதி மூடியும், மீதி திறந்தும் இருக்குமோ அதுபோல், உனது சிவந்த மலர்க்கண்கள் சற்றே குவிந்தும், மெல்லத் திறந்துமிருக்கும் தாமரை முகையைப் போல் கிடக்கிறதே! அழகிய விழிகளை மெல்ல மெல்ல மலர்த்தி எமைக் காணக் கூடாதா!

சூரியனின் தேஜசும் சந்திரனின் குளிர்ச்சியும் ஒருசேர உதிக்கும் உனதிரு கண்களால் எமை நோக்கினால், பற்பலகோடி பிறவிகளின் பாபங்களும் சாபங்களும் ஞாயிறு கண்ட பனிபோல் விலகிப் போகுமே!

யோக நித்திரையிலிருக்கும் அவனுக்கு அவர்களின் தேமதுரப் பாசுரம் ஒலிக்காமலா இருக்கும். விளையாடிப் பார்க்கிறான். சோதிப்பதும் புடம்போட்டு பொன்னாக்குவதும் பகவானுக்கு பிடித்த பொழுதுபோக்கு என்பதல்ல. அவன் கல்நெஞ்சத்தவனும் இல்லை. செம்மைப்படுத்தவும், உரமிட்டு உறுதிசேர்த்து நமை செதுக்குவதன் நோக்கம், அவனது நெஞ்சில் நீங்கா இடமளித்து துன்பமில்லா வீடுபேறு வழங்குதற்கே.

****

**அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான**
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே
சங்கம் இருப்பார்போல், வந்து தலைப்பெய்தோம்.
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்,
அங்கண் இரண்டுங் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்.

****

## 23.திருப்பாவை பாசுரம் 23 -- ராஜாதிராஜா

ஊழிகாலத்தில் பிரபஞ்சம் அசைவின்றி பிரம்மத்துடன் ஒடுங்கியிருக்கும். அனைத்தும் ஏகமான நிலையில், பிரிவேதும் இல்லாத ஒடுக்கம். சத்தும் அசத்தும் ஒன்றாகிய நிலையில் நல்லது கேட்டது என்ற பேதமில்லை. காலமும் கர்மாவும் கூட செயலின்றி ஸ்தம்பித்துக் கிடக்கும்.

அப்படி ஓய்வு கொண்டிருக்கும் ஆதிநாராயணனை போல, தன் பெருமைகளையெல்லாம் யோக நித்திரையில் ஒடுக்கி, விழிமூடிக் கிடந்த கோபாலனின் அழகை பாடிய ஆண்டாள், அவன் உறக்கத்திலிருந்து விடுபடும் திருப்பள்ளி எழுச்சியின் கம்பீரத்தை பாடுகிறாள்.

மழைக்காலத்தின் போது குகைக்குள் ஒதுங்கி உறங்கியிருக்கும் சீற்றமிகு சிங்கம் தானும் மானும் ஒன்றெனவே ஒடுங்கியிருக்கும். விழிக்கும் போது சிலிர்த்து எழும். சுயத்தை உணர்த்தும். பிடரியை சிலுப்பும், கண்களில் பொறிபறக்க பெருங்கர்ஜனையுடன் தன் சிறப்பை கானகத்துக்கே எடுத்துரைக்கும். காட்டின் ராஜா தானென்று உணரும், உணர்த்தும்.

அது போல் எழுந்த கண்ணனே, மிடுக்குடன் நடை போட்டு உமது சிங்காசனத்தில் எழுந்தருளுங்கள். புவனத்தின் சக்கரவர்த்தி நீரே. எப்பேர்பட்ட சிங்காசனம்! எவரும் வீழ்த்த முடியாத உறுதியான சிங்காசனம். உமையன்றி இன்னொருவர் பிரபஞ்சத்தின் மகாராஜாவெனப் பறைசாற்ற இயலாது. நீரே ஆட்சி புரியும் ஆண்டவன். சிங்காசனத்தில் சிம்மத்தைப் போலவே கொலுவிருந்து, எம் குறைகளைக் கேட்டுக் களைவாய்.

கண்ணனே மன்னனாக வீற்று மக்களின் குறை களைய வேண்டுகிறாள். பள்ளியெழுந்தவுடன் தங்களைப் பற்றி கூறிவிடவில்லை ஆயர்கள். நீ ராஜா, நாங்கள் பிரஜை. நீ பிரம்மம், நாங்கள் பொய்யுடல் தாங்கிய ஜீவாத்மா. உமது ஸ்தானத்தில் வீற்றிருந்து எமது குறைகள் போக்குங்கள் என்று துதிக்கிறார்கள்.

அவர்களுக்கென்ன குறை! பாவை நோன்பு நோற்கும் பெண்களின் சங்கல்பம் பூர்த்தியாக வேண்டுமென்ற விருப்பம். கோதை நாச்சியாரின் விருப்பமோ அவனன்றி வேறில்லை.

****

**மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்**
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமா போலேநீ, பூவைப் பூவண்ணா உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்
****

## 24.திருப்பாவை பாசுரம் 24 -- திருமாலின் திருவடியே போற்றி போற்றி

எப்பேர்ப்பட்ட வீரன் நீ. உனைக் கொண்டாடுவது நாங்கள் செய்த பெரும்பேறு. எங்கள் முன்னோர்கள் செய்த வினைப்பயனே உன்னை நினைந்து உருகும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். ஆண்டாள் பாடிய பாசுரமுத்துக்கள் ஒவ்வொன்றும் எம்பிரானின் பெருமைகளை உரைத்துக் கொண்டே இருக்கிறது.

பகவானின் பாதத்தைப் போற்றும் பாசுரம். எப்படிப்பட்ட பெருமையான பாதங்கள்! பாத அரவிந்தங்களை சரண் அடைதவர்களுக்கு பிறப்பற்ற சூழலைத் தந்து காத்தருளும் கவசம். பாதபூஜை, பாதுகா ஸ்லோகங்கள் மற்றும் குருமாரின் பாதத்துளிகளின் பெருமைகளும் ஞானிகள், மஹான்களின் பாதங்களே நமக்கு அபயமளிக்கும் ரக்ஷை என்று உணர உதவுகிறது. வீட்டிலும் கூட பெரியவர்களின் பாதம் பணிதல் நம் செருக்கை மட்டுப்படுத்த உதவும். பெரியோரின் ஆசிகளைப் பெற்றுத் தரும்.

பாதங்களுக்கு அத்தனைப் பெருமை. உலகளந்தவனின் பாதங்களின் விசேஷம் சொல்லிலடங்கா. ஓங்கி உலகளந்தவனிடம் தனி அபிமானம் அவளுக்கு, ஒன்றுக்கும் மேற்பட்ட பாசுரத்தில் கொண்டாடுகிறாள். பிஞ்சுப் பாதங்களால் செருக்கை அடக்கியவன். மஹாபலியின் ஆணவத்தை கால்களால் அடக்கிய திருவடிகளே போற்றி. அதே போல் எம் ஆணவம் கொன்று ஆட்கோள்வாய். மூன்றே அடிகளால் மூவலகம் அளந்த பெருமைக்குரிய பொன்னடிகள் போற்றி.

இராவணனை ஜெயித்து ஆட்கொள்ள அழகிய லங்கைக்கு நடந்தே சென்ற வலிமையுடைய பூம்பாதங்களுடைய வெற்றிச்செல்வனுக்கு வந்தனம். எத்தனை பெருமைக்குறிய கால்கள். பாதுகையையும் பரதனுக்கு அளித்து, முட்களிலும் கற்களிலும் கால்வைத்த ஸ்ரீராமனின் திருப்பாதங்கள் சரணம்.

சக்கரவடிவம் தாங்கிய சகடாசுரனை பிஞ்சுக்கால்களால் உதைத்து துவம்சம் செய்த புகழ்மிக்க பொற்றாமரையடிகளை போற்றுகிறோம்.

வத்ஸாசுரனை சுழற்றியடித்தவன் திருவடியின் திருக்கழலே போற்றி.

வத்ஸாசுரனும் கபித்தாசுரனும் கம்சனால் ஏவப்பட்டவர்கள். வத்ஸாசுரன் இளங்கன்றின் வடிவம் பூண்டு, ஆயர்களின் பசுக்களுடன் இணைந்தான். கண்ணனை வீழ்த்தும் எண்ணத்தின் மடமை. கபித்தாசுரன் அங்கே விளாமர வடிவமெடுத்து தனை ஊன்றிக்கொண்டான். இருவரும் மாயாரூபம் தரிப்பதில் தேர்ந்தவர்கள். கண்ணன் வத்சாசுரனைக் கண்டுகொண்டான்.

இளங்கன்றின் வடிவாக இருக்கும் வத்ஸாசுரனின், பின்னங்கால்களையும் வாலையும் பிடித்து தட்டாமாலை சுற்றி வீசியெறிந்தான். வத்ஸாசுரன்

விளாமரத்தில் போய் விழுந்து பெரும் சத்தத்துடன் மடிந்தான். அவன் இடித்த வேகத்தில் விளாமரமாக இருந்த கபித்தாசுரனும் வேரற்று சாய்ந்தான். இருவரும் அசுர உருவத்துடன் பூமியதிர வீழ்ந்து மாண்டனர். அந்த வத்ஸாசுரனின் கால்களை சுழற்றி அடித்த வீரன் பிஞ்சுத்திருவடியின் திருக்கழல்களை போற்றுகிறோம்.

ஸ்ரீக்ருஷ்ணனின் திருவடியைப் போற்றிய கோதை, அபயளிக்கும் அவன் கைகளை நமஸ்கரிக்கிறாள். கைகால் பிடிப்பது புவியில் மானிடப் பிறப்பெடுத்த சாதாரணருக்கு செய்ய வேண்டியதை விடவும் இறைவனின் கைகால் பிடித்தால், அவன் நமை கைவிடாது அழைத்துச் செல்வான். கைபிடித்து உயர்த்தி வைப்பான்.

இந்திரனின் கோபத்துக்கு ஆளான ஆயர்குலத்தை கோவர்தனை கிரியை சிறு சுட்டுவிரலால் அபயமளித்த திருக்கரங்களை உடையவனின் காருண்யத்துக்கு தலைவணங்குகிறோம். பகைவர்களை பந்தாடி வெற்றிகண்ட உன் திருக்கை வேலை நமஸ்கரிக்கிறோம்.

உன்னை, உன் வீரத்தை பாடியாடிக் கொண்டாடி திருவடி பணிந்து, சேவகம் செய்யவே உன்னருள் வேண்டி வந்திருக்கும் எங்களுக்கு உன் அபயக்கரம் நீட்டு.

****

**அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி**
சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
கொன்றடச்சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்.

## 25.திருப்பாவை பாசுரம் 25 -- தேவகீநந்தனுக்கே சேவகம்

என்ன வேண்டும் உங்களுக்கு! என்றானாம் கண்ணன். புகழ்ந்தேத்திப் பாடிக்கொண்டே இருக்கும் இவர்களுக்கு என்ன வேண்டுமென்று அவனுக்குத் தெரியும்! பக்தர்கள் வாயினாலேயே தங்களுக்குப் பிரியமானதை வரமாக கேட்டுப் பெறட்டும் என்றே நிதானிக்கிறான்.

எத்தனையோ பக்தர்கள், முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள் தவம் செய்கின்றனர். தவத்தின் பயனாக வரம் வேண்டுவதும், அதனை வழங்குவதும் இறைவன் சித்தப்படியே நடக்கிறது. யாது வரம் வேண்டப் போகிறார்கள் என்று மும்மூர்த்திகளுக்கோ முழுமுதற் கடவுளுக்கோ தெரியாததல்ல.

.

'என்ன வேண்டும் உங்களுக்கு!' என்ற கிடைத்தற்கரிய தருணத்தை முழுவதுமாகப் பாழ்படுத்தி, தன் சுயநலத்தின் பொருட்டு சாகாவரம் பெற்ற சகலபுவனத்தையும் அராஜகம் செய்த அசுரர் குலத்தவர் ஏராளம்.

காலநேமி என்ற அசுரன் முற்பிறப்பில் மஹாவிஷ்ணுவால் சம்ஹரிக்கப்பட்டவன். மறுபடி கம்சனாக பிறந்திருக்கிறான். கம்சனை கஞ்சன் என்று விளிக்கிறாள் ஆண்டாள். கயவன். சுயநலமிக்கவன். கடும்பற்றுக்கு ஆட்பட்டு தன்னலத்தை தவிர பிறர் நலம் கருதாதவன். ஆசைத் தங்கை தேவகியின் மைந்தனைப் பற்றி அசரீரி ஒலிக்கக் கேட்டதும் தன் அன்பைத் துறந்தவன். பிஞ்சு பாலகர்களைக் கொல்லத் துணிந்தவன். அன்பை வழங்கத் தெரியாத கஞ்சன், கம்சன்.

.

கண்ணன் பிறந்த பின்னும் அந்த குழந்தைக்கு, கம்சன் கொடுத்த தொல்லைகள் ஏராளம். ஒளித்து வளர்க்க வேண்டிய கட்டாயம். ஒளிந்து வளரவேண்டிய திருச்சித்தம். யசோதையும் நந்தகோபரும் வரம் பெற்றிருந்தனர். பகவானின் பிள்ளை விளையாட்டை கண்டுகளிக்கும் பாக்கியம். தேவகி வசுதேவரின் வேண்டுதலையும் நிறைவேற்றி, தேவகியின் திருவயிறு உதித்தார். ஏராளமான பக்தர்களின் கோரிக்கைகள். தவமாகப் பெற்ற வரங்கள்.

மரீசி மகரிஷியின் புதல்வர்களின் சாபம் நீக்குதல், சிசுபாலனை வதம் செய்து, துவார பாலகர்களை ஆட்கொள்வது, காளிங்கனுக்கு விடுதலை, வீடுபேறு விரும்பிய ஞானியர் கோபிகைகளாக, ஜீவ-பரமாத்ம ஐக்கியத்தின் ஆனந்தத்தை அவர்களுக்கு வரமளித்தல், பூதகியின் முக்தி, பூபாரம் குறைக்க பூதேவிக்கு அளித்த வரம், ஒரே அவதார நிகழ்வின் பாத்திரங்களாக இத்தனை பேரையும் நுழைத்து, தக்கதொரு பொம்மலாட்டம் நிகழ்த்தி, அவரவர்களுக்கு ஏற்ற வரத்தை வழங்கி மகிழ்ந்தான். சிலருக்கு முக்தி, வேறு சிலருக்கு பக்தி.

வேண்டிய வரத்தை புத்திசாலித்தனமாக யாசிக்க வேண்டும். பக்தியோடு குழைத்து பெறவேண்டும். கோதை இப்பாசுரத்தில் எப்படிப்பட்ட வரம்பெறுவது என்று சாதாரணர்களாகிய நமக்கு உணர்த்துகிறாள்.

தேவகி என்ற ஒருத்தியின் மைந்தனாகப் பிறந்து யசோதையிடம் ஒளிந்து வளர்ந்தாய். முலைப்பால் அருந்தும் அரும்புப் பருவத்திலே கம்சன் ஏவிய இடர்களை தகர்த்தெறிந்து, உன் உயர்ந்த இருப்பை நிலைநாட்டினாய். நீ யார் என்பதை அவன் உணரத் துவங்கியதும் வயிற்றில் பயமெனும் நெருப்பு. பக்தர்கள் வயிற்றில் கருவாக ஜனித்து பால்வார்த்த நீ, பகைவர்க்கு தீவார்க்கிறாய்.

உன்னிடம் நாங்கள் யாசகம் பெறவே வந்தோம். உன் உயர்ந்த குணத்தை, நீங்கா செல்வத்தை போற்றிப் புகழ்ந்தபடி சேவை செய்தே நின்று, எங்கள் வருத்தம் தொலைந்து போகும் நிலையருள்வாய். நீங்காபக்தியை கேட்டுப் பெறுகிறாள். சேவை செய்தே உய்யும் நிலையை வேண்டி நிற்கிறாள்.

****

**ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓர் இரவில்**
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலானகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே? உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருகி யாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.
*****

## 26.திருப்பாவை பாசுரம் 26 -- கோதையின் தாயுள்ளம்

அன்பிற்கினியவனே, உனக்கே பணிபுரியும் பேரானந்தத்தைத் தவிர வேறேன்ன வேண்டும் எங்களுக்கு! எங்களுக்கு முன் சென்ற பெரியோர்கள், ஞானிகள் கூறிய வழிமுறைகளைக் கடைபிடித்து மார்கழி நீராடி நோன்பு நோற்றிருக்கிறோம். நோன்பு நிறைவேற என்னவெல்லாம் வேண்டுமோ அதையெல்லாம் கொடுத்தருள்வாய்.

எங்கள் விரதம் சாதாரண விரதமல்ல. நோன்பு நோற்றது உன்னடி பற்றியிருக்கவே. நீ பெரியவன். பிரளய காலத்தில் ஆலிலையில் ஒட்டுமொத்த உலகத்தை உன் மணிவயிற்றுக்குள் சுருக்கி, பிஞ்சுககாலின் கட்டைவிரலை செவ்வாயில் வைத்து ஞாலத்தின் ஒடுக்கத்தை உணர்த்துகிறாய். அத்தனையும் உன்னுள் அடக்கம். நீயே அம்ருத நிலையில் ஞானத்தின் வடிவான ஆலிலையில் பிரம்மவடிவமாக நிற்கிறாய்.

பரமபுருஷனாகிய நீயே இருக்கையில், உன்னிடம் அற்ப விஷயங்களை நாடி வருவோமா?! சின்னச் சின்ன சிற்றின்பங்கள் வேண்டவில்லை. பொன்னும் பொருளும் மண்ணும், ஆட்சிபீடமும் வேண்டுபவர்கள் அல்ல. பெரிய பெரிய விஷயங்களைத் தான் வேண்டப் போகிறோம். என்னவென்று சொல்கிறோம் செவிசாய்த்து திருவருள் புரிவாய்.

நீலக்கல் நிறத்து ரத்தினமே, உன் வெண்சங்கினைப் போல பல சங்குகள் வேண்டும். ஞாலத்தையே மங்கலப் பேரொலி கொண்டு எழுப்பும் உன் வெண்சங்கு பகைவர்களை நடுக்கச்செய்யும். உன் சங்கநாதமே பக்தர்களை துயிலெழுப்பி விழிப்பூட்டும். எங்களுக்கும் பல சங்குகள் வேண்டும். பெரிய பறைகள் வேண்டும். உனது ஏற்றத்தை இன்னிசையாக்கி பல்லாண்டு பாட பெரியோர் வேண்டும். மங்கல விளக்குகளும், நாங்கள் உனது திருநாட்டினை அலங்கரிப்பவர்கள் என்று சுட்டிக்காட்டும் கொடியும், வெளியிலிருந்து எமைத் தாக்கும் பனியும் குளிரும் தீண்டாதிருக்க விதானமும் வேண்டும்.

இங்கு சுட்டிக்காட்டப்படுவதெல்லாம் பரமாத்ம நிலை. பக்தர்களை மஹான்களே வெண்சங்கும் முரசும் கொண்டு எழுப்புகிறார்கள். திருமாலின் திருப்புகழை பாடியாடி அவன் பெருமையை நமக்குப் புகட்டுகிறார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் கண்டுணர ஞானமெனும் தீபங்கள் ஏந்தியிருக்கிறார்கள். பரமனுக்கே பணியும் வைகுந்தவாசிகள் என்ற அடையாளக் கொடி தாங்கியிருக்கிறார்கள். உட்புறத் தேடலில் ஈடுபடும் போது வெளிப்புறத் தடைகள் தீண்டாதிருக்க, பக்தி எனும் விதானம் கொண்டிருக்கிறார்கள்.

இவையெல்லாம் ஆண்டாள் கேட்டுப் பெறுகிறாள். இல்லை. அவளே பூதேவி பிராட்டி. நமக்காக கேட்கிறாள். நமக்காக தூது சென்ற தாயாகிறாள். ஆண்டாளின் திருவடி சரணடைந்து அவள் கருணையை போற்றி நிற்போம்.

**மாலே !மணிவண்ணா மார்கழி நீராடுவான்**
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே
சாலப்பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருள் ஏல் ஓர் எம்பாவாய்
*****

## 27.திருப்பாவை பாசுரம் 27 -- சூடிக்கொடுத்து சூட்டிக்கொண்டாள்

தன்னிடத்தில் பற்று இல்லாதவரையும் அன்பினாலே வெல்லும் கோவிந்தனே, நோன்பு நோற்ற பலனைக் கண்டு நாடே எமைப் புகழவேண்டும். திருமிக்க பரிசுகளை எமக்கு வழங்குவாய். அதன் பெருமையை ஊர் புகழ, இதுவரை பாலும் நெய்யும் கொள்ளாமல், கண்மை தீட்டாமல், மலர் அலங்காரத்தை ஒத்தி வைத்திருக்கும் நாங்கள் மகிழும் வண்ணம் எமக்குப் பெருமை சேர்ப்பாய்.

நீ அளிக்கும் சன்மானத்தால் குளிர்ந்து நாங்கள் விரதம் முடிப்போம். தோள்வளை, கைவளை, செவிப்பூ, தோடு, பாடகம் என்ற அழகிய அணிகலன்களை கொண்டாடி அணிவோம். உயர்ந்த ஆடைகள் உடுத்தி, சோறே தெரியாத அளவு பசுநெய்யூற்றி பக்குவமாக சமைக்கப்பட்ட பால்சோற்றை கூடியிருந்து உண்டு மகிழ்வோம். குளிர்வோம்.

பாவை நோன்பு நோற்ற பலரும் சீமாட்டிகள். செல்வந்தர் வீட்டு செல்லப் பெண்கள். ஆனாலும் நோன்பிற்காக பாலும் சோறும் உண்ணாமல் நலிந்திருந்தனர். நோன்புதனை முறைப்படி முடித்து அதன் பலனை இறைவன் அளித்தால் மகிழ்ந்து கொண்டாடுவார்கள்.

ஆண்டாளும் நெய்வாரிப் பெய்யும் பால்சோறு உண்டு அணிகலன்கள் அணிவதைக் கேட்கிறாள். கிடைத்ததா? அவளது கோவிந்தன் ஆண்டாளை திருமணக் கோலத்தில் பெருமைப் படுத்தி தன்னிடம் சேர்த்துக் கொண்டபோது கிட்டியது.

எவ்வித அணிகலன்கள் அணிகிறாள்? அவன் நாமத்தையே தோடாக அணிந்து மின்னுகிறாள். கோவிந்தனுக்கு சொல்லப்படும் ஸ்துதி செவிப்புவாகி மலர்கிறது. அவனுக்கு செய்யும் கைங்கர்யங்களை கைவளையாக, வங்கியாக அணிகிறாள். கோபாலனை நோக்கியே நடந்த பாதங்களுக்கு பாடகம் அணியாகிறது. ஸ்தூலமாகிய இப்பூவுடலை உதிர்த்து கோலோகம் செல்லும் புத்தாடை அணிகிறாள். அவள் உண்ணுவதெல்லாம் அவனைப் பற்றிய எண்ணமே, கொண்ட பிரேமையே நெய்யாக மிதக்க பாலன்னம் இனிக்கிறது. அனைத்து பக்தர்களோடும் கூடிக் குளிர்க்கிறாள்.

****

**கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன் தன்னைப்**
பாடி பறை கொண்டு யாம் பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்து ஏல் ஓர் எம்பாவாய்

*****

## 28.திருப்பாவை பாசுரம் 28 -- பக்தியோகத்தின் பெருமை

பாசுரம் மொத்தமும் பக்திப்பெருக்கில் உருகி, நமை உருக்குகிறது.

அறிவற்றிருக்கிறோம். உன்னுடைய உறவைத் தவிர வேறு எதுவுமே நாங்கள் சம்பாதித்த பொக்கிஷமாகக் கருதவில்லை. பசுக்களை மேய்ப்பதும், கானகத்தில் கூடி, உணவு உண்ணுவதுமாக பொழுதைக் கழிக்கும் எளியவர்கள். எங்களுக்கு மறைகளோ, ஞானமோ, வேதாந்தமோ பிரம்ம-தத்துவமோ தெரியாது. ஆராய்ந்து பார்க்கும் இயல்பும் திறனும் இல்லை.

பிரபஞ்சமும், படைப்பும், பெரியதும், புவனமும் புரியவில்லை. புத்திக்கு எட்டவில்லை. நாங்கள் இடைகுலத்தவர். எமக்கு தெரிந்ததெல்லாம் நீ வந்து எங்கள் இடைக்குலத்தில் பிறந்த பெருமை மட்டுமே. எங்களோடு இருந்தாய், வளர்ந்தாய். உனக்கும் எமக்குமான உறவு இன்று நேற்றோடு முடிவு பெறுவதல்ல. நீயின்றி நாங்களும், நாங்களின்றி நீயும் இருக்க இயலாது.

அறிவுப் பேதைமையால் உன்னை மரியாதையற்று ஒருமையில் அழைத்திருந்தால், பழகியிருந்தால், விளையாடியிருந்தால், அதனை அன்பின் வெளிப்பாட்டாக கருதி, பிழை பொறுத்தருள் பரந்தாமா.....

மானிடகுலம் எனும் இடைக்குலத்தில் தோன்றிய பரம்பொருள். ஆதியந்தமில்லா அரும்பொருள். ரூபமில்லா பெரியோன். நாமெல்லாம் சம்சாரம் எனும் பெருங்காட்டுக்குள் உறவுகளை, ஆசைகளை மேய்த்து, உணவுண்டு உடல்வளர்க்கும் எளிய ஜீவாத்மா.

ரூபமேதுமில்லாத பரப்பிரம்மம், நமைப் போன்ற மானிடனாக அவதாரம் தாங்கியது. கருணையின்பால் நம்முடன் விளையாடியவனை, நாம் ஒருமையில் அழைக்கிறோம். உரிமையோடு சாடுகிறோம். அன்பினாலும் அஞ்ஞானத்தினாலும் நாங்கள் மரியாதையற்று நடந்திருந்தால் அவற்றை மன்னித்து எம்மையும் எம் சிறு நோன்பினையும் ஏற்று அருள்வாய்.
.
பாசுரம் பாடியாடும் கோபிகைகள், பக்தியெனும் நல்முத்தினைப் பெற்ற பாக்கியசாலிகள். வேதமும் வேதாந்தமும் விஞ்ஞானமும் மெய்ஞானமும் கொஞ்சம் வழிவிட்டு,  பின்னர் அவையே பக்தியோகமாகப் பரிமளிக்கிறது.

****

**கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்து உண்போம்**

அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெருந்தனை புண்ணியம் யாம் உடையோம்
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா, உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா! நீ தாராய் பறை ஏல் ஓர் எம்பாவாய்
****

## 29.திருப்பாவை பாசுரம் 29 -- சாஸ்வதமான பந்தம்

லௌகீக சுகங்களில் வைராக்கியம் வர மறுத்தாலும், லௌகீகத்தை ஒரு கையில் பிடித்து, ஆன்மீக பயணத்தின் பயிற்சியை இன்னொரு கையில் பிடித்தபடி நீடிக்கவும் கடினமாகிறது. உயர்ந்த ஸ்தானத்தில் நிலைபெற்று நிற்க தெளிவும் மனவுறுதியும் அத்தியாவசியம். லௌகீகத்தின் பிடியை மெல்லத் தளர்த்தி இறுதியில் விட்டுவிடும் தைரியம் எல்லோர்க்கும் இருப்பதில்லை.

.

எதனிடம் பற்று வைக்கிறோம் என்பது நம் கையில் உள்ளது. உணவின் மீது பற்று வைத்தால் திருப்தியான நல்ல உணவு கிடைக்கும். பொருள் மீது பற்று கொண்டால் பொருள் சித்திக்கும். புகழைத் தேடினால் புகழ்சேரும். பகவானிடமும் அளப்பரிய பற்று கொண்டால் படிப்படியாக அவனை அணுகலாம். கோபியர்கள் தெளிந்த ஞானிகள். இதுவரை பறைதரும்படி பகவானிடம் பிராத்தித்துக் கொண்டிருந்தனர்.

பறை வேண்டியவருக்கு பரிசு தரப்போகிறான். அவரவர் அபிலாஷைகள் நிறைவேறப் போகின்றன. அது நிலைத்து நிற்குமா? என்ற எண்ணம் ஐயத்தை கிளப்புகிறது. நிலையற்ற எதையாவது கேட்டுவிட்டோம் என்று நினைத்து அதனை வரமருளி கபட விளையாட்டு விளையாடுவானோ! கள்வனவன்.

கண்ணா எங்கள் கோரிக்கைகளை இப்போது தெளிவாகவே சொல்லிவிடுகிறோம். வைகறைப்போழுதில் நீராடி நியமங்களோடு நோன்பு நோற்று உன் பாதாரவிந்தங்களை சரண் புகுந்தோமே...ஆநிரை மேய்க்கும் ஆயர்க்கொழுந்தே, பசுக்களான நாங்களே நீ பாதுகாக்கும் ஜீவாத்மா. எங்கள் அறிவுக்கு எட்டிய சிறு சேவைகளை புரிந்து உமை அணுகுகிறோம். நீ எங்களை பாராமல் போகாதே. எங்களுக்கு அபயக்கரம் நீட்டாமல் விட்டுவிடாதே.

இன்று நீ தரும் பரிசுக்கு மகிழ்ந்து விரதம் முடிக்கும் எண்ணமில்லை. இன்றைக்கு மட்டுமான பரிசு எதுவும் கோரவில்லை. எங்களுக்கு நிலையான பறை வேண்டும். ஏழேழு பிறவிகளுக்கும், உம்முடனேயே சாஸ்வதமான உறவு பூணுவோம். உமக்கே சேவை செய்து, உனக்கே தாசி(தாசன்)யாகி இருப்போம்.

.

எங்களுக்கு வேறேதேனும் அறிந்தோ அறியாமலோ அபிலாஷைகள் இருக்குமாயின் அதனை நீக்கிவிடு. நிலையற்ற இன்பத்துக்கும் துன்பத்துக்கும் உழல வைக்கும் காம- க்ரோத- மோஹ- மத- மாத்சர்யங்களை

போக்கிவிடு. ஆசைகள் துறந்திடவே வழிநடத்து. எங்களுக்கு பறையாக, நித்தியமானதொரு பரிசாக நீயே வேண்டும்.... நீ மட்டுமே.

.

***

**சிற்றஞ் சிறு காலே வந்துன்னைச் சேவித்து உன்**
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்!
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களை கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்று ஏல் ஓர் எம்பாவாய்
***

## 30.திருப்பாவை பாசுரம் 30 -- ஆழ்கடலின் முத்து

பாவை நோன்பை கடைபிடிக்கும் வழிகளை, அதன் உயர்ந்த நோக்கத்தை தேமதுரத் தமிழில் பாமாலையாக சூட்டியிருக்கிறாள் ஆண்டாள். லௌகீக விஷயங்களை விரும்பிப் பெற்றிருந்தால், பாவை நோன்பு இன்னுமொரு ஸ்துதியாகியிருக்கும். நோன்பு நோற்றவர்கள் ஆயச்சிகள். கோபிகைகள். அவர்கள் அடைந்த உயர் நிலையை இங்கு சுட்டிக்காட்டிய கோதை, நமக்கெல்லாமும் பாதை காட்டியிருக்கிறாள்.

இந்த பாசுரங்களை அதன் பொருளை, அது கூறும் உயர்ந்த அர்த்தங்களை உள்வாங்கி, பக்தியுடனும் அன்புடனும் பாசுரம் பாடுபவர்கள், நான்கு புஜங்களையுடைய பங்கஜ நேத்திரன் திருமாலின் அனுகிரஹம் பெற்றவர்கள் ஆகிறார்கள். திரு நிறைய பெறுகிறார்கள். திரு என்றால் செல்வம். பொருள் வளத்துடன், அருள்வளம், அறிவுவளம் பெருகிறார்கள். அனைத்து செல்வங்களையும் பெற்ற பெரும் செல்வந்தர்கள் ஆகிறார்கள். நிரந்தர இன்பம் எய்துகிறார்கள்.

நோன்பு நோற்ற கோபியர்கள் அழகானவர்கள் செல்வச் செழிப்பு நிறைந்தவர்கள். அவர்களை வழி நடத்திய ஸ்ரீவில்லிப்புத்தூரின் ரத்தினமான பெரியாழ்வார் மகளோ நிலமகளே ஆவார். உயர்ந்தவர்களால் பின்பற்றபட்டு, தாயாராலேயே ஆசீர்வதிக்கப்பட்ட விரதம்.

கேசி என்ற அரக்கனைக் வதைத்த கண்ணனைப் பாடிப் புகழ்வோம். ஓயாத அலைகள் நிறைந்த வங்கக்கடலை, வாசுகியை மத்தாக்கி கடைந்தவன். நம்முள்ளத்து கடலை கடைந்து அதிலிருக்கும் தேவையற்ற விஷத்தை வெளியேற்றி, அமுதமாகிய பக்தி எனும் திருவை வெளிக் கொணர்பவன்.

கைபிடித்து இட்டுச்சென்ற ஆண்டாள் ஆழ்வார் பொன்னடி போற்றி. அவன் அடி பணிவோம். பிறப்பின் பெரும்பயன் அதுவே என்றுணர்வோம்.

***

**வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை**

திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி
அங்கு அப்பறை கொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்
செங்கன் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

***

# எங்களைப் பற்றி

**மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:**

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

**ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:**

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

**தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:**

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஒர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

**சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?**

அமேசான் கிண்டில் கருவியில் தமிழ் ஆதரவு தந்த பிறகு, தமிழ் மின்னூல்கள் அங்கே விற்பனைக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை நாம் பதிவிறக்க இயலாது. வேறு யாருக்கும் பகிர இயலாது.

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

**தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?**

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை "யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்" என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது "Creative Commons" எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் "All Rights Reserved" எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் "All Rights Reserved" என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை "Creative Commons" உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள்

பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை “மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்”-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

**FreeTamilEbooks.com**

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6” devices, EPUB

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம் (download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

**இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?**

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை
எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:

1. ஒருசில பதிவர்கள் எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை/ “Creative Commons” உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்
2. தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்

3. சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள்freetamilebooksteam@gmail.comஎனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?**

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாகப் பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

**இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?**

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

**எவ்வாறு ஒர் எழுத்தாளரிடம் Creative Commons உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?**

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள்http://www.FreeTamilEbooks.comஎனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop, ebook readers like Kindle, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் support செய்யும் pdf, ebub போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை “Creative Commons” உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : **freetamilebooksteam@gmail.com**
FB : https://www.facebook.com/FreeTamilEbooks48

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் “Creative Commons License”-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலை freetamilebooksteam@gmail.com எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?**

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

**மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?**

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும்.அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம்.அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-Iபகுதி-IIஎன்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

**தவிர்க்க வேண்டியவைகள் யாவை?**

இனவெறி, பாலியல்நுகர்வு, வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?**

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- **email : freetamilebooksteam@gmail.com**
- Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks

**இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?**

குழு – https://freetamilebooks.com/team/

**Supported by**

- Free Software Foundation TamilNadu, www.fsftn.org
- Yavarukkum Software Foundation http://www.yavarkkum.org/

# உங்கள் புத்தகங்களை வெளியிட

உங் கள் படைப்புகளை மின்னூலாக இங்கு வெளியிடலாம்.

1. எங்கள் திட்டம் பற்றி

தமிழில் காணொளி: https://youtu.be/Mu_OVA4qY8I?si=wxTiNiQSoGF3850k

2. படைப்புகளை யாவரும் பகிரும் உரிமை தரும் கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம் பற்றி:

- கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமை – ஒரு அறிமுகம்
- Wired.com வழங்கும் கிரியேட்டிவ் காமன்ஸ் அறிமுகம்
- உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமத்தை இங்கே தேர்ந்தெடுக்கலாம்.

3.

மேற்கண்டவற்றை பார்த்த பின், உங்கள் படைப்புகளை மின்னூலாக மாற்ற பின்வரும் தகவல்களை எங்களுக்கு அனுப்பவும்.

1. நூலின் பெயர்
2. நூல் அறிமுக உரை
3. நூல் ஆசிரியர் அறிமுக உரை
4. உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்
5. நூல் – text / html / LibreOffice odt/ MS office doc வடிவங்களில். அல்லது வலைப்பதிவு / இணைய தளங்களில் உள்ள கட்டுரைகளில் தொடுப்புகள் (url)

இந்த விவரங்களை இந்தப் படிவத்தில் நிரப்புக.

அவை
தாமாகவே https://github.com/KaniyamFoundation/Ebooks/issues/ இங்கு பகிரப்படும். இங்கிருந்தே பங்களிப்பாளர்கள் நூல்களைத் தேர்ந்தெடுத்து மின்னூலாக்கம் செய்வர்.

விரைவில் மின்னூல் உருவாக்கி வெளியிடுவோம்.

——————————————————————————–

நீங்களும் மின்னூல் உருவாக்கிட உதவலாம்.

மின்னூல் எப்படி உருவாக்குகிறோம்? –

தமிழில் காணொளி : https://youtu.be/bXNBwGUDhRs?si=mg6gyIuzGVxfY437

இதன் உரை வடிவம் ஆங்கிலத்தில் – http://bit.ly/create-ebook

A4 PDF, 6 inch PDF கோப்புகளை Microsoft word இலேயே உருவாக்க – https://freetamilebooks.com/create-pdf-files-using-microsoft-word/

எங்கள் மின்னஞ்சல் குழுவில் இணைந்து உதவலாம்.

நன்றி !